தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உக | பார்த்திப—தை 1946—ஜனவரி | மலர் ௰

பொங்கல் வாழ்த்து.

பொங்குக இன்பந் தங்குக நன்றே
மங்குல்சேர் வானின் வளம்பல சுரக்க
எங்கும் பயிர்கள் இனிதுறத் தழைத்துத்
துங்கமார் விளைவினைச் சொரிந்திட இன்றே
அவ்விளை வதனால் அடுநெய் யாவுதி
இன்புற வாற்றி எழிலுற மக்கள்
பசிப்பிணி நீக்கும் பாலுறு நாளெனப்
பல்லோர் கூறும் பண்புரை மாறத்
தமிழக மெங்கணும் சால்புற உணவள
வளித்தே யரசு அடக்கிடக் கண்டேம்
விளைவுபற் றாமல் வேற்றுநாட் டரிசி
வரும்வழி பெறாமல் மாழாந் தேங்கிக்
கோதுமை சோளங் கொளப்பற் றாமல்
எங்கும்ஏக் கற்றே எளிமையார் மக்கள்
வானினை நோக்கி மண்ணினை நோக்கி
மறுபுலத் தவர்தம் வண்மையை வேண்டி
நின்றே வாடும் நிலைமையி லிந்நாள்
வந்ததே யாயினும் மகிழ்பூத் தொளிர
வருமாண் டாயினும் வகைசெய வென்றே
இந்நன் னாளை ஏற்றே மகிழ்வேம்
தமிழனை யருளாற் றமிழக மெங்கணும்
பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் வண்மையுஞ் சுரந்து
இன்பம் பொங்கி இந்நாட் டினிது
உரிமை வேட்கை ஒருமையிற் பொங்கித்
தரியலர் நாணத் தமிழக ஆட்சி
இமயம் வரையில் இனிதுறத் தழைக்க

தமிழ்க்கொடி பறக்க தமிழ்முழக் கொலிக்க
என்றே எந்தம் இன்றமிழ்த் தாயின்
மலரடி வணங்கி வாழ்த்துதும் நன்றே.

பொழிலாசிரியர்

பொங்கல் வாழ்த்து

நண்பர்க்கறிவித்தல்

ஆசிரியர். புலவரேறு, அ. வரதநஞ்சைய பிள்ளை.

நேரிசையாசிரியப்பா

பொங்குக பொங்கலே ! பொங்கல்பொங் குகவே
உலகெலாம் நடுங்கிய உன்னருங் கொடும்போர்
அணுக் குண்டாலே அடியற் றொழிந்தது
தீங்கும் நன்மைபின் செயுமெனும் உண்மையால்
அடிமை நாடென்னும் அரும்பழி நீங்கி
உரிமைநா டிதுவெனப் பெருமைகொள் காலம்
கையகப் படுகுறி காண்கிறோம் இன்றே
ஆதலின் நாமதற் காவன புரிவோம்
இப்புது நாளெமக் கின்பந் தருக !
சாதித் தருக்கும் சமயப் பூசலும்
தத்தங் கொள்கையே தகுமெனும் பித்தும்
ஒருவரை ஒருவர் சுரண்டலும் ஏய்த்தலும்
வறுமையும் கல்லாச் சிறுமையும் ஒழிக !
மக்கள் யாவரும் ஒக்கலோர் குலமே
எல்லாத் தெய்வமும் எம்மொரு கடவுளே
தமிழ்நாட் டின்மொழி தமிழர்க் குயிரே
என்னும் நல்லெண்ணம் எங்கு மோங்குக !
வெற்றிவேற் பெருமான் மென்மலர்ப்
பொற்பதம் போற்றுதும் பொங்குக பொங்கலே.

இரா. ச. சுப்பிரமணியம்,

கூட்டுறவு டிப்டி ரிஜிஸ்ட்ரார் தஞ்சை.

நறுமணத் தையின் பொங்கல் பொங்குக ஞாலம் எல்லாம்
உறவெனுந் தேனைக் கூட்டி உலகெனும் பாண்டத் தூற்றி
மறமெனும் மாசு போக்கி வாழ்க்கையின் அரிசி தூவி
அறமெனும் தீயிற் காட்டி ஐக்கிய அமுதஞ் செய்வோம்.
திறந்திடும் ஞானக் கண்கள் தெரிந்திடும் தேவ மார்க்கம்
பறந்திடும் பொருளா தாரப் பஞ்சமும் பிளவும் போரும்
கறந்திடும் நலன்க ளெல்லாம் ஐக்கியக் காம தேனு
சிறந்திடும் மனித வாழ்வும் தேசமும் வாழி வாழி.

கலை வணக்கம்.

பண்டித. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்

1. வாழ்க, தமிழ் மொழி,
வாழ்க தமிழ் மக்கள்,
வாழ்க தமிழ்த் திருநாடு,
2. வாழ்க இயற்றமிழ்,
வாழ்க இசைத்தமிழ்,
வாழ்க நாடகத்தமிழே,
3. வாழ்க, தமிழர் கலை,
வாழ்க தமிழர் அறம்,
வாழ்க தமிழர் வீரம்.

தமிழ்நாடு 3-வது நாடகக்கலை மாநாடு.

சென்னை மௌண்ரோட் நியூ தியேட்டரில் 1946 சனவரி 26 27-ஆம் நாட்களில் முத்தமிழ் வள்ளல் இராவ்பகதூர் A. Y அருளானந்தசாமி நாடார் அவர்கள் சீரிய தலைமையில் நடைபெறும்

அன்பர்கள் அனைவரும் வந்திருந்து சிறப்பித்தருள வேண்டுகிறேன்.

இங்ஙனம்,
ஐ. குமாரசாமி பிள்ளை.

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

அடியிற்கண்ட நாட்களில் சங்கத் தமிழ்ப் பெருமன்றத்தில் பேரறிஞர் (Dr.) திரு. சி. பா. ய. சுரேந்திரநாத ஒகளி ஆரியா அவர்கள், M. A., B. D., S. T. M., Ph. D., கீழ்க்காணும் பொருள் குறித்துச் சொற்பொழிவாற்றினார்கள்.

11—12—45 செவ்வாய்-ஒளவையார் கருதும் கல்வி.
12—12—45 புதன்-வள்ளுவர் கருதும் ஒழுக்கம்.
13—12—45 வியாழன்-கபிலர் கருதும் ஒற்றுமை.
14—12—45 வெள்ளி-பட்டினத்தாரின் கைவல்லியம்.
15—12—45 சனி-தாயுமானவரின் சமரசம்.
16—12—45 ஞாயிறு-கடவுளாராய்ச்சி.

அன்பர்கள் அனைவரும் வந்திருந்து கேட்டு மகிழ்ந்தனர். இச் சொற்பொழிவு குறித்து திரு. A. சண்முகசுந்தரம் பிள்ளை B. A., அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி பாராட்டுதற்குரியது.

குறிப்பு.

தமிழ்நாட்டு எல்லை குறித்து, திருநெல்வேலித் தமிழ்ச்சங்கம் வெளியிட்டுள்ள கருத்து, செயல் முதலியவற்றைப் பிறிதோரிடத்துக் காணலாம். அவற்றைப் பாராட்டி முற்றும் ஒப்புகின்றோம். வட வேங்கடத்தப்பாலும் பரவி இருந்த தமிழ் நாட்டின் எல்லையைச் சென்னைக்கு இப்பாலும் தள்ளிவைக்கச் சிலர் கருதுவது பெரிதும் கண்டிக்கத் தக்க செயலாம்.

இங்ஙனம் ஒதுக்கி வைக்கச் சிலர் கருதுவதற்குத் தமிழ்மக்கள் தம் நாட்டினிடத்தும் அவர்கள் தாய் மொழியினிடத்தும் கொண்டுள்ள கவலை இன்மையே காரணம் என்னலாம். தமிழ் நாட்டிற்கும் தமிழிற்கும் பிறர்சூழும் இடைஞ்சல்களைக் கண் கூடாகக் கண்டும் தமிழ் மக்கள் வாளாவிராது விழித்தெழுந்து இப்பெரிய இடையூற்றினை அகற்றிக் கொள்ள முயலுதல் தன்மானமுள்ள தமிழர்களின் முதற் கடமையாம்.

தமிழ்ப் பெருமக்களும், தமிழ்க் கழகங்களும் தனித்தும் சேர்ந்தும் இப்போராட்டத்தில் இறங்கித் தங்கருத்தினைப் பொது மக்களுக்கும், அரசியலார்க்கும் எடுத்து மொழிந்து முயன்று தம் கருத்தினை முற்றுவித்துப் பண்டைப் பெருநிலையைக் காத்துக் கொள்வார்களென நம்புகின்றோம்.

[redacted]

தமிழ் நாட்டு எல்லை அறிக்கை

இரண்டாம் உலகப்போர் இப்போது முடிந்துவிட்டது. ஆங்கிலேயர் இந்தியாவுக்குத் தக்கபடி விடுதலை அளிப்பதென வாக்குறுதி கொடுத்துள்ளார். ஆங்கில நாட்டிலிருந்து தூதுக்குழுவும் இந்தியாவுக்கு இப்போது வந்துள்ளது. அந்தத் தூதுக்குழு இந்தியாவின் தற்கால நிலைமையைச் சரிவர உணர்ந்து, ஆங்கில அரசினருக்கு எடுத்துக்கூறும். இந்நேரத்தில் தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் அதிலுள்ள குறைபாடுகளை எடுத்துக்கூறி அக்குறைகளைப் போக்கிக் கொள்ளுவது தமிழ் நாட்டார், 'தமிழ் மக்கள்' என்ற உணர்ச்சியில் குல மத கட்சி வேறுபாடின்றி ஒத்துழைக்க வேண்டும்.

இந்தியாவிலுள்ள ஏனைய மொழியாளர்கள் தமது மொழி, மொழிக்குரிய இனம், தமது நாடு என்ற மூன்றுக்கும் பாதுகாப்புத் தேடிக்கொள்வதில் எவ்வகைவேற்றுமையும் இன்றிக்கண்ணுங்கருத்துமாய் வேலைசெய்து வருகின்றார்கள் என்பது தமிழ் நாட்டார் அறிந்ததே. தமிழ் நாட்டார்மட்டும் தமது மொழியிலும், தமதுமொழிக்குரிய இனத்திலும், தமது நாட்டிலும் சிறிதும் கவலை இன்றி, குல மத கட்சி வேற்றுமைகளால் தம்மை மறந்தும், தமது நாட்டையும் மொழியையும் மறந்தும் வாளா இருப்பது மிகமிக இரங்கத் தக்கது.

வரலாற்றுத்தொடக்க காலமுதல் இன்றுவரைத் தமிழ் நாட்டின் வடக்கெல்லை திருப்பதி என வழங்கும் திருவேங்கடமலை ஆகும். இதனை,

" வடவேங்கடம் தென்குமரியாயிடைத்
தமிழ்கூறு நல்லுலகம் "

என்று பல்லாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட தொல்காப்பியம் என்ற பண்டைத் தமிழ் நூலில் கூறி இருப்பது காண்க.

கி. மு. முதலாம் நூற்றுண்டில் இமயம் முதல் குமரிவரை ஒரு மொழிவைத்து உலகாண்ட முதலாம் கரிகாலன் காலத்துக்கு முன்னிருந்தே குறும்பர் என்னும் பல்லவர் கட்டிய தொண்டை நாட்டு 24 கோட்டங்களுள் திருவேங்கடக் கோட்டமும் ஒன்று. இத் திருவேங்கடக் கோட்டத்தில் (தற்காலம் சிற்றூர்க் கோட்டம் என வழங்கும்) இன்று திருவேங்கடமும், திருக்காளத்தியும், திருத்தணிகையும் இன்னும் பல தளிகளும் தமிழர் கட்டிய முக்கிய கோயில்களாகும். இந்தத் திருவேங்கடக் கோட்டத்தை (சிற்றூர்க் கோட்டத்தை) இன்று தெலுங்கர் தங்கள் நாட்டைச் சேர்ந்ததெனக் கூறுகின்றனர். அக்கோட்டத்திலுள்ள தமிழர்களைத் தெலுங்கு படிக்கும்படிக் கட்டாயப் படுத்துகிறார்கள். தெலுங்கர் தம்முடைய மக்களையும் மொழியையும் மிக விரைவாக நாள்தோறும் தமிழ் நிலத்தில் பரப்பி வருகின்றார்கள்.

தெலுங்கர்கள் இப்படிச் செய்ய, மலையாளர்கள் (கேரள நாட்டார்) தனித் தமிழர்வாழும் தமிழ்நிலமாகிய நாஞ்சில்நாட்டை (நாகர்கோயிலைச் சுற்றியுள்ள நிலப்பரப்பு) திருவாங்கூர் அரசர் தமது நாட்டுடன்சேர்த்து அங்குள்ள தமிழர்களை மலையாள மொழியைக் கற்கும் படிக் கட்டாயப்படுத்துகின்றார்.

தமிழ் நாட்டின் வடமேற்குப் பகுதியில் கன்னட நாட்டார் நுழைந்து தம்முடைய மக்களையும் மொழியையும் பரப்பி வருகின்றார்கள்.

இவ்வாறு தமிழ் நாட்டின் நிலப்பரப்பின் வடக்கும், வடமேற்கும், தெற்கும் குறைந்து, தமிழைப் பேசும் மக்கள் தொகையும் குறைந்து அழிகின்றது. இதனைச் சிந்தித்துப்பாராமல் தமிழர் ஐயகோ ! வாளா இருக்கின்றனரே !

இனிமேலாவது தமிழர் கண்விழித்துத் தமிழ் நாட்டெல்லையைத் தொல்காப்பியர் காலத்து வரன்முறைப்படி பாதுகாப்பது முன்னணி வேலையாகும்.

தமிழ்மொழி, தமிழ்நாடு, தமிழர் கைத்தொழில், தமிழர் வாணிபம், தமிழர் மருத்துவம், தமிழர் சமயம், தமிழ் நாட்டுச் செல்வம் முதலியவற்றின் பாதுகாப்புக்காகத் தமிழர்பேர் அவையும், தமிழர் ஆட்சியும் வேண்டும்.

மக்களுக்கு இன்றியமையாது வேண்டப்படும் எல்லா அறிவுகளையும், பிற நாட்டார் தமது மொழியின் வாயிலாகவே எளிதாய் அடைந்து உரிமையுடன் வாழ்வதைப்போல் தமிழர் வாழவேண்டு

மாயின், சென்னைப் பல்கலைக் கழகத்தையும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தையும், இனி உண்டாகப்போகும் கோயமுத்தூர்ப் பல்கலைக் கழகத்தையும் தமிழ்ப் பல்கலைக் கழகங்களாக ஆக்கல் வேண்டும்.

தமிழ் நாட்டுத் தலைநகராகிய சென்னையில் நடைபெறும் உயர் நீதிமன்ற முதல் தமிழ்நாட்டு எல்லா நீதிமன்றங்களிலும் தமிழர் வழக்குகளைத் தமிழர் எல்லோரும் அறியும்படி, வழக்கறிஞர்கள் தமிழ் மொழியிலேயே வாதித்தலும், நீதிபதிகள் தமிழ் மொழியில் தீர்ப்பு எழுதுதலும் கூறுதலும் வேண்டும்.

இனிவரும் ஆட்சியில் மொழிவாரியாக மாகாணங்கள் பிரிக்கப் படும்போது, தமிழ் மாகாணம் தனியாகப் பிரிக்கப்படும். எல்லை பற்றிய வழக்கை இப்போது நாம் கவனியாவிட்டால் மாகாணப் பிரிவினையின்போது நாட்டின் வடபகுதியை இழக்க நேரிடும். ஆதலின் வேண்டுவன செய்யத் தமிழர்கள் இன்றே முன்வரவேண்டும்.

இனி ஏற்படும் தமிழ் மாகாணத்தில் தொல்காப்பியத்திற் கூறிய படி வட எல்லையைத் திருவேங்கட மலையாகவும், சென்னையை மாகாணத் தலைநகராகவும், தெற்கிலுள்ள நாஞ்சில் நாட்டினைத் தமிழ்நாட்டுப் பகுதியாகவும் இருக்கத் தமிழராகிய நாம் குலமத கட்சி வேறுபாடின்றி ஒரே முகமாக முயலவேண்டும்.

—தென்னிந்தியத் தமிழ்ச் சங்கத்தார்.

தமிழ் மக்கட்கு ஒரு வேண்டுகோள்.

தமிழ் எல்லையைப் பாதுகாத்தல் தமிழ் மக்கட்கு உயிரான வேலையாகும். எனவே ஆங்காங்கே கூட்டங்கள் கூட்டிக் கழகங்கள் வழித் தீர்மானங்கள் நிறைவேற்றி அரசினர்க்கும் எங்கள் சங்கத்திற்கும் அனுப்பும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

தென்னிந்தியத் தமிழ்ச்சங்கம்,
6, பவழக்காரத்தெரு, சென்னை.

தமிழ் நாட்டின் வட எல்லை

ஐயா,

சில ஆண்டுகளாக ஆந்திரர்கட்கும் தமிழர்கட்கும் எல்லைத் தகராறு இருந்து வருவதை நீங்கள் அறிவீர்கள்.

ஆந்திர மக்கள் ஆந்திர நாட்டின் தெற்கெல்லையைக் கூவம் நதியாக வைத்துச் சென்னைத் துறைமுகம், உயர்நீதி மன்றம், சட்டக் கல்லூரி, கோட்டை முதலிய இடங்களைத் தங்கள் நாட்டோடு சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று தங்களுக்குள் குல மத கட்சி வேறுபாடின்றி ஒரே முகமாகக் கிளர்ச்சி செய்து வருவதையும் அதற்கான வேலைகளைச் செய்து வருவதையும் நீங்கள் அறிவீர்கள்.

விடுதலைபெற்ற இந்தியாவில் தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கு வடவெல்லையை நிலை நிறுத்துவது இன்றியமையாததாகும்.

ஒரு முயற்சியும் செய்யாத தமிழ் மக்கள் இதுகாறும் வாளா இருந்ததனுல் தமிழ் நாட்டின் சில பகுதிகளை இழந்திருக்கின்றனர்.

தமிழ் நாடு என்பது 'வடவேங்கடந் தென்குமரியாயிடை' என்பது தொல்காப்பியர் காலமுதல் வரையறுக்கப்பட்டதாகும்.

இத்தனை எதிர்க் கிளர்ச்சி நடைபெறு மிக்காலத்திலும் தமிழ் மக்களிடத்தில் தங்கள் நாட்டெல்லையைப் பாதுகாக்க வேண்டுமென்ற உணர்ச்சி அரும்பாமலிருப்பது வருந்தத்தக்கது.

இப்போது இதற்கான முயற்சியைச் செய்து பாதுகாக்காவிட்டால் இனி வரும் ஆட்சியில் தமிழ் நாடு மிகச் சுருங்கிச் சீர்கேடடையும் என்பது ஒவ்வொருவரும் ஊன்றி உணர்தற்குரிய பொருளாகும்.

இதற்காகத் தமிழ் மக்கள், வேண்டிய முயற்சிகளைச் செய்யாமல் இனியும் வாளா இருக்கலாமா ?

'வாயுள்ள பிள்ளை பிழைக்கும்' என்பது உய்த்துணரற்பாலது.

ஆந்திர நாட்டினர் செய்யுங் கிளர்ச்சியின் காரணமாக அண்மையில் சென்னை மதியுரைஞர் (Adviser) ஸ்டிராதி (Mr. Strathie) என்பார் தமிழ் நாட்டின் தலைநகரைத் திருச்சியில் வைப்பதென்றும், ஆந்திர நாட்டின் தலைநகரை பெஜவாடாவில் வைப்பதென்றும், சென்னை நகரை இருநாட்டினர்க்கும் பொதுவாக வைப்பதென்றும் தமது கருத்தைத் தெரிவித்துள்ளார்.

இனி அடியிற் கண்ட கேள்விகட்கு 20—1—46 க்குள் தங்கள் விடை வேண்டுதும்.

1. ஆந்திரர்கள் சென்னையிலுள்ள கூவம் நதிக்கரையை ஆந்திர நாட்டின் தெற்கெல்லையாக வைக்கவேண்டுமென்று கேட்பதற்குச் சான்றுகள் உண்டா ?

2. தொல்காப்பியம் தொடங்கிய தமிழ் இலக்கியங்களில், தமிழ் நாட்டின் வடவெல்லை 'வடவேங்கடம்' என்பதை ஆந்திர மக்கள் எங்ஙனம் மறுக்கக்கூடும் ?

3. சென்னையை, மாகாணத்திற்குப் பொது இடமாகக் கேட்பதற்குத் தமிழ் மக்கள் இணங்கலாமா ?

4. தமிழ் நாட்டின் தலைநகரம் சென்னையை அமைப்பதின்றி வேறு நகரத்தை ஏன் அமைக்கவேண்டும் ?

5. ஆந்திரர்கள் தமக்கெனப் பல்கலைக் கழகம் ஒன்று அமைத்துக்கொண்டமையால், சென்னைப் பல்கலைக் கழகம் தமிழ்ப் பல்கலைக் கழகமாக அமைய வேண்டாமா ?

6. ஆந்திரர்கட்கு விசாகப்பட்டினம் பெரிய துறைமுகமாக அமைந்திருப்பதுபோல் தமிழ் மக்கட்குச் சென்னையைத் தவிர வேறு பெரிய துறைமுகத்திற்கு இடமுண்டா ?

மேற்கண்ட கேள்விகட்குத் தங்கள் உள்ளத்தில் எழுங் கருத்துக்களை விடையாக இது கிடைத்த பத்து நாட்களுக்குள் எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

5—1—46-ல் உயர்திரு. ரா. பி. சேதுப்பிள்ளை, பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் கூடிய தமிழ் அறிஞர் கூட்டத்தில் பிப்ரவரி 3-வது வாரத்தில் சென்னையில் ‘ தமிழ்நாட்டு எல்லை மாநாடு ’ என ஒரு மாநாடு கூட்டுவதென முடிவு செய்யப்பெற்றிருக்கிறது.

எனவே, தங்கள் விடையைக் காலந்தாழ்த்தாமல் அனுப்பின் நலமாகும்.

தங்கள் அன்புள்ள,

10—1—46. தென்னிந்தியத் தமிழ்ச் சங்கத்தார்.

குறிப்பு :—அறிஞர் கருத்துக்களை யெல்லாந் திரட்டி மாநாட்டிற்கு முன் அச்சிட்டு வெளிப்படுத்தக் கருதியுள்ளோம்.

தமிழ்நாட்டு எல்லை மாநாடு
தமிழன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்.

அன்புடையீர் !

“ வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத் ” தின் கலை, நாகரிகம், பொருளாதாரம், வாணிபம், முதலிய பல் வேறு துறைகளையும் முன்னேற்றமடையச் செய்யவேண்டுமாயின் தமிழ் நாட்டு எல்லையினை வரலாற்று முடிபோடு பாதுகாக்க வேண்டியது இன்றியமையாததாகும். இன்றைய நாட்டு நிலையில் இந்த முயற்சியை விரைவில் வெற்றிபெற முடிக்கவேண்டியது தமிழ் மக்களின் கடமை. இதில் குல, மத, கட்சி வேற்றுமைகள் கிடையாது.

தமிழ் மக்களின் முழு ஆதரவையும் எதிர் நோக்கித் தமிழ் எல்லை மாநாட்டை பிப்ரவரி 3-வது வாரத்தில் கூட்டுவதென அறிஞர்கள் பலர் கூடி முடிவு செய்துள்ளனர். பெருங் கிளர்ச்சியோடு, “ தேமதுரத் தமிழோசை உலகனைத்தும் பரவும் வகை ” யில் மாநாட்டை மிகச் சிறப்பாக நிகழ்த்த ஏற்பாடாகி வருகின்றது.

அன்பர்கள் இவ் வுயரிய தமிழ்ப் பணியில் ஒருமனதாகப் பங்கு பெறுவதோடு தங்களாலியன்ற பொருளுதவியும் செய்யுமாறு வேண்டுகிறோம்.

தாங்கள் அளிக்க விரும்பும் நன்கொடையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அன்புடன் அனுப்புக :—

வ. சுப்பையா பிள்ளை,
செயலாளர்,
தென்னிந்தியத் தமிழ்ச் சங்கம், 6, பவழக்காரத் தெரு, சென்னை.

கொல்லிமலைச் செலவு.

ச. கணபதி, ஆசிரியர், பெருநிலக் கிழவர் உயர்நிலைத் துவக்கப்பள்ளி, துறையூர்.

(முற்றொடர்ச்சி: துணர் 21, மலர் 9, பக்கம் 240)

ஓயங்குழிச் சேரல் :—

நாங்கள் சம நிலத்தில் நடந்து வரும்போது வழியின் இடையே ஓரூர் காட்சி அளித்தது. அவ்வூர் தான் 'ஓயங்குழி' என்பதாகும். அங்கு எங்களோடு வந்த பண்ணை பார்க்கியின் ஓயங்குழியிலுள்ள தோழன், மலையன் ஒருவன் அவரிடம் வந்து, அவர் மாட்டிருந்த அன்பின் மிகையால் 'ஐயா' நான் உமக்குப் பலாப்பழம் இரண்டு கொணர்ந்து தருவன்; ஈண்டே இரும் என்று இயம்பிச் சென்றான். பண்ணை பார்க்கி வழியிலேயே உட்கார்ந்திருந்தார். ஏனையோராகிய நாங்கள் அங்கு வாளாவிராது அவ்வூர்ப்புக்குச் சுற்றிப் பார்த்தேம். அவ்வூர் ஒரு சரிவில் அமைந்து அழகாக உள்ளது. அவ்வழகிய தோற்றத்தைக் காண ஒரு மேட்டில் ஏறினோம். எம் நண்பர் சிட்டி உடனே தன்னிடமிருந்த விரைவுப் படப் பொறிதனை (Snap shot) விரைவினில் எடுத்து அக்காட்சிகளைப் படம் பிடித்தார். கண்ட காட்சிகளைச் சிறிது விண்டு கூறுவாம்.

ஆண்டு வாழையின் ஈட்டமும், வானுயர் பருத்த வளமிகு பலவின் கூட்டமும், தேவகன்னி யெனும் திகடரு மரங்களும், சாமை, தினை யெனும் தீமையில் கூலமும், காஃபி அன்றியும் கருநிற மிளகின் கார்நிகர் கொடிகளும் கலந்து இடை யிடைக் கவினுறுங் காட்சி யளித்தன. நாங்கள் கண் பெற்ற பயன் பெற்றேம். எங்கள் வழியை நோக்கி விழியைச் செலுத்தி எங்கள் வேலையில் இறங்கிச் சென்றோம். அவ்வூர்த் தோழனும் ஊரினின்று அருகுள எங்கள் வழிக்கு வந்து பலவின் கனியை நலமுடன் உய்த்தனன். அவ் வழியிற் சில மலையவர் தாமும் பலவின் கனிகளைப் பாங்காய் விற்றனர். பல மரம் நோக்கினேம்; அடி முதல் முடிவரை வேணநற் பல கனி வீங்கித் தொங்கின. அவை தமைக் கண்டு நாம் அளவில் மகிழ்ச்சி கொண்டே ஏகினேம்.

சோறடைப்பட்டி :—

சிறிது தொலைவில் ஓரூர் தென்பட்டது. சோறடைப்பட்டி ஊரஃதென்றனர். அதனுள்ளும் நுழைந்து அவ்வூர் கண்டேம். ஓரில் புக்கேம். இல்லோர் வந்து இனிய நல்ல பல்லுரை கூறி இன்முகத்தோடு எமை வரவேற்றனர். அவர்கள் அன்பெமக்கு அகமகிழ் வூட்டிற்று. நம்முடை ஊர்களில் இல்லுறை நல்லவன் ஆணை பெறாதவன் இல்லுட் புக்கால், அன்னவன் என்ன செய்குவன் என்பதை அனைவரும் அறிவர். இம் மலையவர் மனைகளில் எவர் மனை தன்னிலும் மனையவர் ஆணையின்றி நுழைந்து பார்க்கலாம். நாங்கள்

இரண்டோர் இல்லம் இருந்து அன்னவர் நடை உடை நாகரிகம் அனைத்தும் அறிந்தேம். நாம் மலைவாணர் ஊர்க்குட் புகுந்து சென்று சிறு குடில் நுழையுமுன் நம்மை 'நிலக்காட்டு ஆட்களே' வாருங்கள், என்று அன்புடனும் பரிவுடனும் அழைத்து இருக்கைகள் தந்து இன்புறுத்துகின்றனர். இவையெலாம் கண்டவ்வூரினை நீத்து நீள் வழி நடந்து தாமரைக்குளம் எனும் ஓரிடம் வந்தோம்.

தாமரைக்குளம் :—

இக் குளத்தருகில் எம் வழி ஒட்டி உளதொரு பெரிய ஆலமரமே. ஆலமரத்தடியில் அனைவரும் அமர்ந்தனர். ஆனால் நான் மட்டும் தாமரைக்குளம் போய் அக்குளம் நோக்கினேன். தாமரை ஒன்றும் தண்ணீரிலிலது. ஆனால் அல்லிக்கொடி அந் நீரில் படர்ந்து பரவி அக்குள மெங்கணும் மிக்கே உள்ளன. அன்னதன் பெயர்க்கு மாறாக வக்குளம் இருந்த காரணம் அல்லியைத் தாமரை என்று அவர்கள் மாறுபடக் கருதுதல் போலும். தாமரையே இக் கொல்லி மலையில் ஓரிடத்திலும் கிடையாது.

அக்குளத் தருகுள வளவயல் தன்னைக் கண்டு களிக்க என்னை என்னோடு வந்த வழிகாட்டி சேவி வயற்கு வழிகாட்டி அழைத்துச் சென்றான். நானோ அவனை மலை உச்சியிலிருந்து இவ்விடம் வருங் காறும் ஏலக்காய்ச் செடிதனை என்கணுற் காண எங்குள தெங்குள தென்று வினவினேன். அன்னவன் தானும் அறப்பளியீசர் அருமலைக் கப்பால் வாளைகள் தாவி வானில் முட்டி முகிற்குலங் கிழித்து முது மழை பெயச்செயும் வாளைவந்தி வளமுடைத் திகைவாய் எனு மீரிடத்தில் இயைந்துள மிகுதியாய் என்றே இயம்பினன். அன்றியும் அவன் அத்துடன் நிறுத்தாது அவ்வேலக்காய் ஈண்டைப் பகுதியில் அரிதாய் ஒரு சிறிது உளதென்றுரைத்தான். அக்காய் தன்னை அவனும் நானும் சென்றக் குறிப்பிடப்பட்ட இடத்தில் நோக்கினேம்; அஃது இலாதொழிந்தது. ஆனால் அருமை மிளகுக் கொடிதனில் மிளகின் காயும், அந்நாசி, காஃபி அருஞ் செடிதனையும் ஆண்டுள வயல்தனில் அணுகிக் கண்டேன். அவைதமிற் சில விளங்கன்றுப் பயிர்களை அன்னவன் தானும் பெயர்த்துக் கொடுத்தனன். அவை தமை எடுத்துக் கொண்டு ஆலமரத்தடி சென்று பின் என்றன் நண்பர் தம்மொடு அடிவாரம் நோக்கிக் கடுகி வழி நடந்தேம்.

மலை யிறங்குகை :—

பலப்பல குன்று, பள்ளத்தாக்கு பரவி ஓடும் பெரு மலையருவி, கல்லதர் அத்தம் ஆமிவை தம்மை அனைவரும் கடந்து, தாழ்வரை வந்தேம். வருங்காலை இடையிடையே வானுற ஓங்கி வளர்தரு மரங்கள், பலன் தரும் பச்சிலை (மூலிகை) எழிலுறும் செழுங்கொடி, பூண்டுப் புதர்களை ஆண்டச் சரிவிடைக் கண்டு களித்தேம். அவற்றுட் சில கூறுதும். 1. முயற்காது செடி, 2. மலைதாங்கி, 3. அழகான இண்டு (முட்செடி) 4. மயிலாடு தோகை, 5. குதிரைத் தணுக்கு, இவை நினைவிலுள்ளவை. இன்னோரன்ன பன்னிற மரம், செடி, கொடிகள் மறந்தனன் பலப் பல!

ஆலடிப் பெரியண்ணன் கோயில் :—

பின்னர் அடிவாரம் வந்து வழி நடைக் களைப்பினைச் சிறிதமர்ந்து போக்கி வயிற்றுப் பசியினை வகையாய் ஆங்கிருந்த சிற்றுண்டிக் கடையில் இளநீர், அப்பம், தேநீர் எனுமிவை உட்கொண்டு போக்கினம். காலந் தன்னைச் சிறிதே கழித்து நாட்டார் புகழும் நாட்டான் மடுவை நாங்கள் அனைவரும் நண்ணி யடைந்து குளித்தல், துவைத்தல் குறைவில செய்து அம்மடு நீத்து ஆலடிப் பெரியண்ணன் ஆலயம் அடைந்தேம். ஆண்டு, பல கழிந்ததால் பேராலமரம் ஒன்று பெயர்ந்து அழிந்தது. அன்னதன் விழுதுகள் ஐம்பதற்கு மேல் அகன்று விரிந்து பரந்து நின்றுள. இஃது நருமதை யாற்றின் கரையிலுள்ள மூவாயிரம் சிறு விழுதுகள், எழுநூறு பெரு விழுதுகள் கொண்ட ஏழாயிரம் பேர் தங்கும் அத்துணைப் பெரு மரமின்றாயினும் 'ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சருக்கரை' எனும் முதுமொழி போல ஈண்டுள மரங்கள் எல்லாவற்றினும் இம் மரமே பெரிதென்றியம்புவன். அவ்வால மரத்தடியில் அனைவரும் அமர்ந்து அடப்பட்டிருந்த அருஞ் சோறதனை அவாவுடன் அயின்றேம். பகலவன் மறைந்தான்.

வைரிச்செட்டிப்பாளையம் சேரல்:—

நாங்களும் எங்கள் நடையைத் துவக்கினேம். சிறிது தொலைவு சென்ற பின் எம்மை வண்டி கொணர்ந்து வரவேற்றனர் நண்பரின் ஆட்கள். அதில் எம் நண்பரிற் பெரும்பாலோர் அமர்ந்து சென்றனர். என்னொடு நால்வர் பின்னே வந்தனர். வைரிச்செட்டிபாளையம் இரவு ஒன்பதின் மணிக்கு உவப்புடன் சென்றோம். நண்பரில்லம் சென்று, மஞ்சள் நன்னீர் ஒரு சிறிதருந்தி, அவ்வூர்தனிலுள்ள வைரிச்செட்டிக் கோயில், காமாட்சி கோயில் சென்று வந்தேம்.

(துறையூர்ச் செலவு) கொல்லிச் செலவின் முடிவு :—

உடனிரா உணவு ஒரு பத்தின் மணிக்கு விருப்பத்தோடு உண்டு, ஒரு பெரிய மாட்டு வண்டியில் வைகுறு விடியல் நாலொடு மேலரை மணிக்கு, துறையூர் தன்னை நண்ணி யடைந்தேம். இத்துடன் எங்கள் இன்புறு கொல்லிச் செலவு முடிந்தது.

பிற் சேர்க்கை :—என் மலைக்காட்டலுவலராம் (Forester) நண்பர் எனக்குக் கொடுத்த குறிப்புகள். இக்கொல்லி மலையிலுள்ள நாடுகளை வட, நடு, தென் பகுதிகளாகப் பன்னிரண்டு நாடுகளாகப் பிரித்துள்ளனர். அவை, வடபகுதி நாடுகள் :— 1. இடைப்புளி. 2. திருப்புளி. 3. பிறகரை. 4. ஆலத்தூர். (சித்தூர்) 5. பெயில் நாடு எனப் பிரித்து அவைகளைச் சேல மாவட்டம் (Dt) இராசிபுரம் வட்டத்தோடு (Taluk) சேர்த்திருக்கிறார்கள். 2. நடுப்பகுதி நாடுகள் 1. அரியூர். 2. வலப்பூர். 3. குண்டூர். 4. வாளைவந்தி எனப் பிரித்து அவைகளை சேலம் மாவட்டத்து (District) நாமக்கல் வட்டத்தோடு (Taluk) சேர்த்துளர். 3. தென்பகுதி நாடுகள் :— 1. சேளூர். 2. திண்ணனூர். 3. தேவானூர் எனும் மூன்நாடுகளாகப் பிரித்து நாமக்கல் வட்டத்தோடு சேர்த்துளர். கொல்லி மலையிலுள்ள கூடுதல் நாடுகள் வட-

பகுதியில் ஐந்தும், இடைப்பகுதியில் நான்கும், தென்பகுதியில் மூன்றும் ஆகப் பன்னிரண்டு ஆகின்றன. இந்த எல்லா நாடுகளிலுள்ள மலையாளிகட்கும் தலைமையானவன் வலப்பூர் நாட்டிலுள்ளவன் தான். இவனுக்கு எல்லோரும் கீழ்ப்படிந்து நடப்பர். அம் மலையாளிகள் அனைவர் வழக்குகளையும் இவனே தீர்த்து நீதி வழங்குவான். குற்றங்களுக்கு இவன் அபராதம் 50, 100 வெண்பொன்கள் போடுவான். ஒவ்வொரு நாட்டிற்கும் பத்து, இருபது சிற்றூர்கள் (பல சில) இருக்கும். நாட்டை நாம் மஜரா (Hamlet) என்கிறோம். ஒவ்வொரு ஊருக்கும் ஒரு ஊராண்மைக்காரன், (Village Munsif) கணக்குப் பிள்ளை உண்டு. பிறக அவரவர் நாட்டிலும் தனித்தனியே நாட்டாண்மைக்காரர் ஊராண்மைக்காரர் உண்டு. வீரகனூர் என்னுமிடத்தில் ஒரு சோலையில் சித்தன் உரு (புத்தர் சிலை) ஒன்றுளது. அங்கு ஒரு குளத்துக் கல்சுவரில் சிற்பவேலைகளும் காணப்படுகின்றன. இம் மலையிலுள்ள (கொல்லி) மரங்கள் (வானளாவிய பெரு) 1. தில்லை மரம். இம் மரத்தின் பால் உடலில் பட்டால் உடல் கொப்புளிக்கும் (வீங்கும்) 2. சண்பக மரம். இம் மரங்கள் முன்னே குறிப்பிடப் பட்டுள்ள கொங்கணம்மன் என்னும் கொல்லிப்பாவைக் கோயிலுள்ள (சேலூர் நாட்டு, வீரகனூரிலுள்ள சித்தன் குட்டு மலையில்) இடங்களில் மிகுதி. இச் சண்பக மரங்கள் பூக்குங் காலத்தில் தான் இவ்வம்மனுக்குத் திருவிழா நடாத்துவர் இங்குள்ள மக்கள். இச் சண்பகப்பூ பூத்திருக்கும்போது மலை யேறினால், சில நாட்டு மக்களுக்கு மலேரியா காயல் வரும் என்பர். அப்பூக்கள் நல்ல மழை பெய்து வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போகப்பட்டால் அந்நோய் வராது என்றும் கூறுவர். 3. சடைமரம். இம் மரத்தின் இலைகள் அழகாய் (கொன்றைப்பூப்போல்) சடை சடையாய்த் தொங்குவதால் இதற்கு இப்பெயர் ஏற்பட்டது. 4. குங்குலிய மரம் 5. வேங்கை மரம் 6. தேவ கன்னி 7. ஈருகா 8. காட்டிலவு 9. கோங்கு 10. செந்தணக்கு 11. காட்டுமா 12. சந்தனம் முதலியன. இன்னும் இவை போல் எண்ணிக்கையில்லா வகையில் பல மரங்கள் உள்ளன. நாட்டின் பெயர்கள் அனைத்தும் தமிழ்ப் பெயர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. (ஊர், ஆடவர், பெண்டிர், மரம், செடி, இவ்வனைத்தும் தமிழ்ப் பெயர்களே. வியப்பிற்குரிய பல செய்திகள் இவை போல் பல உள்ளன. விரிப்பிற் பெருகும்.

N. B கொல்லி மலையும் பச்சை மலையும் துறையூரிலிருந்து ஆத்தூருக்குச் செல்லும் வழியில் (Bus route) முருங்கப்பட்டி என்னும் இடத்தில் சந்திக்கின்றன. ஆனால் ஒன்று சேரவில்லை. இரண்டும் தனித் தனியாக முடிவடைகின்றன. இவ்விரண்டும் முடியு மிடத்தின் வழியில் தான் மேற்படி வழி செல்கிறது.

சிலப்பதிகாரக் காப்பிய இலக்கணம்

மகாமகோபாத்தியாய. பண்டிதமணி. மு. கதிரேசச்செட்டியார் அவர்கள், திருச்சி வானொலியில் பேசியது.

சிலப்பதிகாரம் என்பது தமிழில் உள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. இற்றைக்கு ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் சேர நாட்டு அரசர் குடியிற் பிறந்த இளங்கோவடிகள் என்னும் புலவர் பெருமான் இயற்றியது. அவர் இக்காப்பியத்தைப் பாடுதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னரே இவ் வரலாற்றுத் தலைவனும் தலைவியுமாகிய கோவலன் கண்ணகி என்பார் வாழ்க்கை முடிவடைந்தது. அவர்கள் காவிரிப்பூம்பட்டினத்துப் பிறந்து மதுரைக்கு வந்ததும், சிலம்பு காரணமாகக் கோவலன் மடிந்ததும், அது பொருத கண்ணகி சேர நாடு சென்று விண்ணுலகம் சென்றதும் ஆகிய இந் நிகழ்ச்சிகளை நேரிற் கண்டவர் சங்கப் புலவருள் ஒருவராகிய தண்டமிழாசான் சாத்தனார் என்பார். அவர் இளங்கோவடிகளுக்கு அறிவிக்க, கேட்ட அவ்வடிகள் சிறந்த சுவைகளுக்கு நிலைக்களமாக இவ்வரலாறு அமைந்தமையால் இதனை ஒரு பெருங் காப்பியமாகப் பாடி முடித்தனர். இக் காப்பியத்திற்கு மணிமேகலை என்பது போல வரலாற்றுத் தலைவியாகிய கண்ணகியின் பெயரைக் குறித்திருக்கலாம். அப்படிப் பெயரிடாமல் சிலப்பதிகாரம் என்று பெயர் அமைத்ததற்குச் சிறந்த காரணமுண்டு. பெரிய கவிகள் தாம் பாடும் காப்பிய வரலாற்றுள் மிகச் சுவை பயந்து நிற்கும் வரலாற்றுப் பகுதி யொன்றை யொட்டி அக் காப்பியத்திற்குப் பெயரிடுவதுண்டு. வடமொழியில் சூத்திரகன் என்னும் புலவர் தாம் இயற்றிய நாடகம் ஒன்றிற்கு "மிருச்சகடிகம்" என்று பெயரிட்டனர். மிருச்சகடிகம் என்பது மண்ணாலாகிய சிறு வண்டி என்னும் பொருளுடையதாகும். இந் நாடக வரலாற்றுத் தலைவர்களாகிய வசந்தசேனை சாருதத்தன் இவருள் ஒருவர் பெயரைக் குறிப்பிட்டிருக்கலாம். அப்படியில்லாமல், அவ் வரலாற்றிற் சுவை மிக்க நிகழ்ச்சி யொன்றைக் காரணமாகக் கொண்டு 'மண் வண்டி' என்று பெயரிட்டனர். அதுபோலக் கண்ணகி காற் சிலம்பு காரணமாகவே, கோவலனும் கண்ணகியும் மதுரை போந்ததும், கோவலன் வெட்டுண்டு இறந்ததும், பாண்டியன் நெடுஞ்செழியன் நீதி பிழைத்தது பொருது உயிர் நீங்கியதும், அது தெரிந்து அவன் பட்டத்தரசியாகிய கோப்பெருந் தேவி மாண்டதும், மதுரை எரியுண்டதும், கண்ணகி சேரநாடு போந்து விட்புலஞ் சென்றதும் ஆகிய இவை யெல்லாம் நிகழ்ந்தன. ஆதலால் இக்காப்பியத்திற்குச் சிலம்பு—அதிகாரம் சிலப்பதிகாரம் என்று பெயரிடப்பட்டது. இக் காப்பியத்திற்கும் மூன்று என்னும் எண்ணிற்கும் பொருத்தமான தொடர்புண்டு என்று கண்ட ஆசிரியர் இக் காப்பியத்தைப் புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என முக் கூறு

படுத்து முடித்தனர். தமிழ் மொழியிலுள்ள இயல், இசை, நாடகம், என்னும் மூன்று பகுதிகளும் இதன்கண் விரவி வரப் பாடினர்.

சோழர், பாண்டியர், சேரர் என்னும் மூன்று தமிழ்ப் பெரு மன்னர்களையும், அவர் தம் மூன்று நாடுகளையும் சிறப்பித்துள்ளார். இக் காப்பியம் நுதலிய பொருளும் மூன்றெனக் கண்டனர் அவை :—

“ அரசியல் பிழைத்தோர்க்கு அறங் கூற்றுவதூஉம்
ஊரைசால் பத்தினிக்கு உயர்ந்தோ ரேத்தலும்
ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதூஉம் ”

ஆம். இம் மூன்று பொருளையும் தன்னகத்தடக்கிச் சூழ்வினைச் சிலம்பு காரணமாகச் சிலப்பதிகாரம் என்னும் பெயரால் நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள் என்றபடி இச் சிலப்பதிகாரம் பாடி முடிக்கப் பட்டது. காப்பியங்களிற் காணப்படும் சுவைகள் ஒன்பது வகை யாகும். அவற்றுள் பெருங் காப்பியங்களுள் மிகுதியாகவும், சிறப் பாகவும் காணப்படுவன மூன்று அவை :—

உவகை, அவலம், பெருமிதம் என்பனவாம். இவற்றை முறையே சிருங்காரம், சோகம், வீரம் என்று வடநூலார் கூறுவர். இம் மூன்றனுள் ஒன்றேனும் விரவாத காப்பியம் சுவையுணர்ச்சியுடை யார்க்கு விருந்தாக மாட்டாது. ஏனைய சுவைகளெல்லாம் சிறு வரவினவாகவும், இம் மூன்றனுள் ஒன்று அல்லது மூன்றும் பெரு வரவினவாகவும் தோன்ற வைத்துச் செய்யப்பட்ட காப்பியங்களே கற்பார் உள்ளத்தைக் கவரும் இயல்பினவாகும். இவ்வுண்மை யுணர்ந்த இளங்கோவடிகள் எல்லாச் சுவைகளுக்கும் இக் காப்பி யத்தை நிலைக்களமாகப் பாடினார் ஆயினும், சிறப்பாக மேற் குறிப்பிட்ட உவகை முதலிய மூன்றனையும் முறையே மூன்று காண்டங்களினும் தோன்ற வைத்தார். முதலாவதாகிய புகார்க் காண்டத்தில் கண்ணகி திருமணம், மாதவியின் ஆடல் பாடல், இந்திர விழவு, கடலாடல் முதலிய இன்பப் பகுதிகளே பெரும்பாலும் கூறப்பட்டுள்ளன. கோவலன்,

“ மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே ”.

என்று கண்ணகியின் நலத்தைப் பாராட்டி,

“ தூமப் பணிகளொன்றித் தோய்ந்தா லெனவொருவர்
காமர் மனைவியெனக் கைகலந்து—நாமந்
தொலையாத இன்பமெலாம் துன்னினர் மண்மேல்
நிலையாமை கண்டவர்போல் நின்று ”.

என்றபடி ஐம்புலனும் ஆரத்துய்த்த செய்திகள் இப் புகார்க் காண்டத்தில் உள்ளன. மேலும் ஆடலும், பாடலும், அழகும் என்றிக் கூறிய மூன்றின் ஒன்றுங் குறைபடாத மாதவி யென்னும் ஆடல் மடந்தையின் இனிய யாழிசையும் மிடற்றுப் பாடலும அபி நயக் கூத்தும் கோவலன் அக் கணிகையொடு மருவி இன்ப நுகர்ந்த செய்திகளும் அக் காண்டத்திலேயே உள்ளன. ஆதலின் அக்

காண்டத்தில் விஞ்சி நிற்கும் சுவை சிருங்கார ரசம் எனப்படும் உவகையேயாகும். இரண்டாவதாகிய மதுரைக் காண்டத்தில் முழுதும் அவலச் சுவையே விரவி நிற்பது அறியலாம். கண்ணகியை மணஞ் செய்து கொண்டபோது அவள் நலத்தைப் பாராட்டியதாக முன்னர்க் குறிப்பிடப்பட்டுள்ளது.

அப் பாராட்டில் கோவலன் தன் ஐம்புலன் நுகர்ச்சிக்கும் அவள் இனியளாய நிலையைக் கருதிக் கூறியதாக அறிகின்றோம். மேலும் ஆங்கு,

“ அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே யென்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே யென்கோ
யாழிடைப் பிறவா இசையே யென்கோ
தாழிருங் கூந்தல் தையால் ”.

என்று பாராட்டியதையும் அறிகின்றோம். அங்ஙனம் பாராட்டிய வெல்லாம் அவள் இளமையும், அழகும் தனக்கு ஒத்தனவாகக் கண்டு காதற் சுவையில் ஈடுபட்ட நிலையிலேயே யாம். இன்பத் துறையில் முழுகிக் கிடந்த அந் நிலையில் சிறந்த பல நற்குணங்களுக்கும் நிலைய மாக விளங்கிய கண்ணகியின் காட்சி அப்பொழுது அவனுக்கு அவ்வாறு புலப்பட்டது. பின்னர் மதுரையில், மாதரி என்னும் ஆயர் குலச் செல்வியின் இல்லத்தில் கண்ணகியை வைத்து விட்டு, அவள் காற் சிலம்பில் ஒன்றை எடுத்துக்கொண்டு அக நகர்க்குப் புறப்படும்பொழுது, பிரிவாற்றுத நிலையில் அக் கற்பரசியின் காட்சியை எவ்வாறு அநுபவித்தான் என்பதை ஆசிரியர் உளங் கரைந்து பாடியுள்ளார். அக் காட்சியே அவ் வுத்தம மணமக்களின் இறுதிக் காட்சி என்பதையும், மீண்டும் இவர்களுடைய இனிய சந்திப்பு நிகழாது என்பதையும், சிறந்து உயர்ந்த முறையில் வாழ்ந்த இவர்களுக்குக் கொடிய தீவினைப் பயன் விளையுங் காலம் நெருங்கி யிருப்பதையும் நூலாசிரியர் அறிந்தவராதலின் அத் துன்பத்தில் உள்ளங்கன்றிக் கோவலன் வாய் மொழியாகப் பாடிய பாடற் பகுதிகள் பின் வருவன :—

“ குடிமுதற் சுற்றமும் குற்றிளை யோரும்
அடியோர் பாங்கும் ஆயமும் நீங்கி
நாணமு மடனும் நல்லோ ரேத்தும்
பேணிய கற்பும் பெருந் துணையாக
என்னொடு போந்திங் கென்றுயர் களைந்த
பொன்னே கொடியே புனைபூங் கோதாய்
நாணின் பாவாய் நீணில விளக்கே
கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி
சீறடிச் சிலம்பின் ஒன்று கொண்டியான் போய்
மாறி வருவன் மயங்கா தொழிகென ”.

இங்கே கோவலன் கண்ட காட்சிக்கு, கண்ணகியினுடைய சிறந்த குணஞ் செயல்களின் வடிவங்களே புலனாயின. பெண்களை வெளியூர்

களுக்கு ஆடவர் கூட்டிச் சென்ருல், அப் பெண் பாலாரைப் பேணும் பொறுப்பு ஆண் மக்களுடையதாகும். கண்ணகி வழி நடந்து செல்லுங்கால், வெப்பத்தால் தன் கால் கொப்புளங் கொண்டது அறிந்து இத் துன்பத்தை இன்னுயிர்க் கணவர் எய்துவரே என்று கணவன் நிமித்தம் இரங்கிப் பரிகரிக்க முயன்ருளேயன்றித் தனக்குத் துன்பமாக எண்ணிஞள் அல்லளாம். இக் குண நலத்தையுட் கொண்டே,

> " தன்துயர் காணுத் தகைசால் பூங்கொடி ".

என்று கவுந்தியடிகளும்,

> " என்ஞெடு போந்து ஈங்கு என் துயர் களைந்த
> பொன்னே கொடியே ".

என்று கோவலனும் பாராட்டுவாராயினர். பொன்னே, கொடியே என்பது முதலியன வெறும் அடுக்கு மொழிகளல்ல. சுடச் சுடப் பொன் ஒளி மிகல் போல இல்லத்தில் இனிதிருந்த இன்ப நிலையினும் காட்டில் வெப்பத்தில் நடந்து செல்லும் துன்ப நிலையில் கண்ணகியின் உயர் குணம் மிகுதியாக விளங்கியதறிந்து பொன்னே யென்ருனும். இங்ஙனமே அம் மொழிகளெல்லாம் கருத்துடையன வென்பது உய்த்துணர்வார்க்குப் புலனுகும். இங்ஙனம் என்றும் இல்லாத முறையில் மனங்குழைந்து பாராட்டிப் பிரிந்த கோவலன் ஊழ்வலியால் கள்வனுகக் கருதப்பட்டு எதிர்பாராத நிலையில் கொலைப்பட்டு இறந்ததும் கண்ணகியின் அடங்காத் துயர் நிலையும் படிப்பவர் உள்ளத்தை உருக்கும் இயல்பினவாம். கோவலன் இறப்பைக் கேட்டவுடன் கண்ணகிக்கு நிகழ்ந்த பதைப்பை ஆசிரியர் நெஞ்சம் பதைத்துப் பாடியுள்ளார். காலைப்பொழுதில் கண்ணகியை விட்டுப் பிரியுங்கால் கோவலன் தன் குடுமியிற் கட்டியிருந்த மலர் மாலையை அவள் கூந்தலிற் சேர்த்தினுகை, அதனை ஏற்றுக்கொண்டு உவகையில் ஈடுபட்ட கண்ணகி மாலைப் பொழுதில் அவன் வெட்டுண்டு கிடந்த நிலையில் அவனுடலைத் தான் பார்க்கத் தன்னை யவன் பாராததனுல் நேர்ந்த கடுந் துயரத்தை மேற் கொண்டாள் என்னும் பொருள் தோன்ற,

> " வண்டார் இருங்குஞ்சி மாலைதன் வார்குழன் மேற்
> கொண்டாள் தழீஇக் கொழுநன்பாற் காலைவாய்ப்
> புண்டாழ் குருதி புறஞ்சோர மாலைவாய்க்
> கண்டாள் அவன்றன்னைக் காணுக் கடுந்துயரம் ".

என்று ஆசிரியர் பாடியிருப்பதும் கண்ணகி பாண்டியன் அவைக் களத்தில் வழக்குரைக்கச் சென்று நிற்கும் நிலையை,

> " காவி யுகுநீரும் கையில் தனிச்சிலம்பும்
> ஆவி குடிபோன அவ்வடிவும் ".

என்றும்,

> " மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
> கையிற் றனிச்சிலம்பும் கண்ணீரும்—வையைக்கோன்
> கண்டளவே தோற்றுனக் காரிகைதன் சொற்செவியின்
> உண்டளவே தோற்ருன் உயிர் ".

என்றும் அவலவுருவாகச் சித்திரித்திருப்பதும் நெஞ்சத்தை யுருக்கும் நிலையினவாம். இது பற்றியே,

"நெஞ்சையள்ளுஞ் சிலப்பதிகார மென்றோர் மணி
ஆரம் படைத்த தமிழ் நாடு".

என்று பாரதியார் பாராட்டினர். மேலும் கோவலன் இறந்து பட்டானாகக் கண்ணகி, கணவனாகிய உயிர் நீங்க வெற்றுடல்போலத் தன் வயம் இழந்து சென்று, நேர்ந்த துயரத்தைப் பாண்டியன் முன்னிலையில் எடுத்துரைத்த அளவில் அரச நீதி பிழைத்த யானோ அரசன் யானே கள்வன் என்று மன்னவன் மயங்கி வீழ்ந்து உயிர் நீத்ததும் அது கண்டு அவன் மனைவியாகிய கோப் பெருந்தேவி,

"தன்னுயிர் கொண்டவனுயிர் தேடினள் போற்
பெருங்கோப் பெண்டும் ஒருங்குடன் மாய்ந்தனள்".

என்றபடி மரணம் எய்தியதும் மதுரை மாநகரம் எரியுண்டதும் ஆகிய வருந்தத்தக்க இவ்வெல்லா நிகழ்ச்சிகளும் மதுரைக் காண்டத்தில் உள்ளனவாதலின் அது அவலச்சுவை வடிவாகவே அமைந்தது என்று கூறலாம்.

இனி மூன்றாவதாகிய வஞ்சிக் காண்டத்தில் செங்குட்டுவன் வீரமும் ஆரிய அரசர்களாகிய கனக விசயரை அவன் போரில் வென்று அடிப்படுத்தியதும், பிறவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. செங்குட்டுவன் வீரபத்தினியாகிய கண்ணகியார்க்குப் படிவஞ்சமைக்க இமையமலையிற் கல்லெடுத்துக் கங்கையில் நீர்ப்படை செய்து, கனக விசயர் என்னும் ஆரிய அரசர் முடியிற் சுமப்பித்துத் தன் நகரத்திற்குக் கொண்டு வந்தான் என்பது வரலாறு. இந் நிகழ்ச்சியை ஆசிரியர் 'மாதவி மடந்தை, கானற் பாணி, கனக விசயர் தம் முடித் தலை நெரித்தது' என்று அழகு பெறக் கூறியுள்ளார். மாதவி கடற் கரையிற் பாடிய பாட்டுக் காரணமாகவே கோவலன் பிரிந்ததும் பின் நிகழ்ச்சிகளும் ஆயின எனக் கண்ட ஆசிரியர் இவ்வாறு கூறினர். மேலும் செங்குட்டுவன் வீரச் செயல்களைப் பற்றி இக் காண்டத்தில் சிறப்பாகப் பல இடங்களிற் காணலாம்.

"ஆரிய மன்னரீரைஞ் ஞூற்றுவர்க்கு
ஒரு நீ யாகிய செரு வெங்கோலம்
கண் விழித்துக் கண்டது கடுங்கட்கூற்றம்" எனவும்,

"கோட்டு மாப்பூட்டி வாட் கோலாக
ஆளழி வாங்கியதரி திரித்த
வாளேருழவன்"

எனவும் கூறிய பகுதிகள் அஞ்சத்தக்க அவன் வீரச் செயலின் மேம்பாட்டைப் புலப்படுப்பனவாம். இவ்வாறு மூன்று காண்டங்களிலும் முறையே உவகை, அவலம், பெருமிதம் என்னும் மூன்று சுவைகளும் விஞ்சி நிற்றலை யறியலாம்.

இனி இக் காப்பியத்திற்கு, இயலிசை நாடகப் பொருட்டொடர் நிலைச் செய்யுள், என்று ஒரு பெயருண்டு. இதன் கண் முப்பது பாடல்கள் உள்ளன. பெரும்பாலும் ஆசிரியப் பாக்களே யுள்ளன. அவை யெல்லாம் இயற்றமிழ்ப் பகுதியைச் சார்ந்தவை. கானல் வரி, வேட்டுவ வரி முதலிய வரிப் பாடல்களெல்லாம் இசைத் தமிழ்ப் பகுதியைச் சார்ந்தவை. ஆய்ச்சியர் குரவை குன்றக் குரவை முதலியன நாடக வுறுப்புக்களுடைமையால், அவை நாடகத் தமிழ்ப் பகுதியைச் சார்ந்தவையாகும். அரங்கேற்று காதையிற் கூறப்பட்ட பொருள்கள் இசை நாடகங்களின் இலக்கணங்களாகும். மேலும் அலங்கார நூலிற் பெருங்காப்பிய இலக்கணமாகக் கூறப்பட்ட வெல்லா வற்றையும் இக் காப்பியம் தன்னகத்து அடக்கியிருப்பதோடு வாழ்த்து முதலியவற்றிலும் வரலாற்றை உள்ளவாறு கூறி முடிப்பதிலும் தனித்த சிறப்புடையதென்பது அறியத்தக்கது.

இக் காப்பியம் முப்பது பாடல்களையுடையது. ஒவ்வொரு காண்டத்தின் இறுதியிலும் கட்டுரை யென்னும் தலைப்பில் அக் காண்டம் நுதலிய பொருள்களும் அதன் கண் அமைந்த இயலிசை நாடகப் பகுதிகள் இன்னவென்பதும் சுருக்கிக் கூறப்பட்டுள்ளன. நுன் முடிவில் நூற் கட்டுரை யொன்றுள்ளது. அதன் கண்,

"தெரிவுறு வகையாற் செந்தமிழியற்கையில்
ஆடிநன் னிழலி னீடிருங் குன்றங்
காட்டுவார் போற் கருத்து வெளிப்படுத்து
மணிமேகலை மேல் உரைப் பொருண்முற்றிய
சிலப்பதிகாரம் முற்றும்"

என்று கூறப்பட்டுளது. ஒரு சிறிய கண்ணுடியில் பெரிய மலையின் முழு உருவத்தையும் அடக்கிக் காட்டுதல் போல விரிந்த கருத்துக்களைச் சுருங்கிய பாடல் அடிகளில் ஆசிரியர் அடக்கிக் காட்டியுள்ளார் என்னும் இது உண்மையே. இதற்கு எடுத்துக் காட்டாகப் பல செய்திகளை இக் காப்பியத்தில் அறியலாம்.

இங்ஙனம் முத்தமிழ் நலமும் செறிந்த வித்தகக் காப்பியம் இச் சிலப்பதிகாரமாதலின் இது தமிழ் இலக்கியங்களுள் தலை மணியாக விளங்குகிறது.

தொல்காப்பியக் கடவுள்

மு. கோவிந்தசாமி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

தமிழர் நாகரிகம் உலகில் பழமையானது மட்டுமன்றி, பெருமையானதுங் கூட என அறிகிறோம். அந்தப் பழமையிலும் அவ்வளவு பெருமையடைந்த அந் நாகரிகத்தின் குறிக்கோள் யாது? அதனையறிந்தால் இன்றைய புதுமையினும், மிகச் சிறுமை யடைந்துள்ள தமிழகத்திற்கும் உலகிற்கும் அது புத்துணர்வினையும், ஊக்கத்தினையும் அளிக்குமல்லவா?

மிகப் பழந்தமிழர் இயற்கையையன்றிக் கடவுளை நினையாததால் தான் அன்றைய உயர்வினையுற்றனர். இன்றைய இயற்கையை மறந்த, கடவுட் கொள்கையே நமது சிறுமைக்குக் காரணம் என்பதெல்லாம் தொல்காப்பியத்தை ஆராயாத அல்லது மறுக்கும், உண்மை நோக்கில்லாதார் வெற்றுரையாகவே முடியும். இன்றையினும் அன்று இயற்கையில் பற்று மிகுதி என்பது மட்டில் உண்மை.

"கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே".

என்ற தொல்காப்பியர், வாழ்க்கையின் இலக்கணங் கூறும் நூற்பாவில் 'கடவுள்' என்ற அழகிய சொல்லே வருகின்றது.

ஒரு மொழியினர் ஓர் சொல்லிற்குக் கூறும் பொருளினையும், அப்பொருளிற்கு வகுக்கும் இலக்கணத்தையும் வைத்தே அவர் தம் அறிவு, உயர்வு ஆயவற்றை அறுதியிட்டு விடலாம். அவ்வழியே, தாம் வணங்கும் ஒன்றனைக் குறிக்கும் சொல் 'கடந்து நிற்பது' என்ற பொருளுடையதாயும், அப்பொருள் கட்டற்றும், வண்மையுடையனவுமாய இலக்கணமுடைய பொருள்களின் தொடர்புடையதெனவுங் கூறுவதிலேயே அன்றைய நாகரிக வுள்ளம் விளக்கமாகின்றது.

இறைவனுக்குத் தமிழர் அமைத்த 'கடவுள்' என்ற உயர்ந்த பொதிந்த கருத்துடையதோர் சொற்போன்ற ஓர் சொல்லினை வேறு எம்மொழியிலுங் கடவுளைக் குறிக்குஞ் சொற்களுள் காணமுடியாது எனத் தமிழர்தம் பேராசிரியர். கா. சுப்பிரமணிய பிள்ளை யவர்கள் கூறுவதுண்டு. ஆம், மக்கள் செம்மையடைய வாழ்வின் குறிக்கோள் தானே கடவுள். அதனை எப்பொருளில் பற்றுகிறார்கள் என்பதில் தானே அவர்கள் முன்னேற்றம் அமையமுடியும். அம் முறையில் அன்று தமிழர் முந்தியே நின்றனர் எனலாம்.

இன்று உலக மக்களுள் எந் நாட்டினும், ஒருவர் மற்றவரை விட உயர்ந்து (கடந்து), அதாவது வலிமை, அறிவு, செல்வம், இவற்றில் கடந்து நிற்க வேண்டுமென்று கருதாதார் யாவரேனும் உளரோ? அன்றும் இதே உள்ளத்துடன் கடந்த உயர்ந்த நிலையையுறக்

கண்ட நெறியைப் பற்றியது தான் 'கடவுள்' (கட=கடந்து, உள்=உள்ளிருப்பது) கொள்கை. இந்த நோக்குடன் அந்நெறியினை ஆராயுங்கள். உண்மை காணலாம். உயர்வடையலாம்.

அந்நெறியில் துணையாகிக் கொள்கைக்கு உருவளிப்பது தான் 'கந்தழி, வள்ளி, கொடிநிலை ஆயமூன்றும். இன்று கடந்த மேம் பாட்டினையடைய நினைக்கும் அடிமை நாடுகளோ, அன்றி அந் நிலையினைக் காப்பாற்றிக்கொள்ள நினைக்கும் உரிமை நாடுகளோ வேண்டுவது 'சுதந்திரம்' தானே? அதாவது பிறர் ஆணையால் கட்டுப்படாத நிலை! இம் முறையினைத் தெளிய அறிந்த தமிழர் அன்று 'கந்தழி'யை வழிபட்டது (கந்து=கட்டு, அழி=அறுத்தது) வேறு எதற்கெனக் கூறலாம்?

மனிதர் மடியும் வரை அவர் தம் விருப்பமும் என்றும் மடிதலே யின்றி மேலும் மேலும் வளர்ந்து (கடந்து) கொண்டே செல்கின்றது. அவ் வேட்கையினை முடிக்கக் கருதும் எவரும் அதனை மாருமல் நினை தலும், அவ்வழி வாழ்வினை முயற்சியுற நடாத்தலுந் தானே இயற்கை யுங் கடமையும், அந் நினைவும், முயற்சியும் (வழிபாடும்) சேர்ந்ததே தமிழர் தம் 'கடவுள்' கொள்கை, கந்தழி வழிபாடு எனக் கூறி விடலாம்.

நன்று, அவ்வுயர்வினை (மற்ருேரினுங் கடந்த நிலை) யடைவதற்கு முதலில் வேண்டுவதாகிய சுதந்திரத்தை (கட்டற்ற நிலையை)ப் பெறு வதற்கோ அன்றிக்காத்துக்கொள்வதற்கோ மக்கள் செய்ய வேண்டுங் கடமைகள் யாவை? இன்று கடவுளைத் தம் உரிமையை யளிப்பவ ராகவோ காப்பவராகவோ எண்ணி மக்கள் பெரிதும் வழிபடுகிருர்க ளன்றித் தம் 'கடமையை' வளர்ப்பவராகவும் அவரை எண்ணு கிருர்களில்லையே. அதனுல் வந்த கேடன்ருே இன்று கடவுட் கொள்கையில் மாசும், வழிபாட்டில் இழுக்கும் அன்று தமிழர் கடவுளைத் தம் 'கடமை'யின் வடிவாகவுங் கண்டனர். அவை தாம் 'கொடி நிலை' 'வள்ளி' யென இரண்டும்.

இவற்றுள் கொடிநிலை ஞாயிற்றினையும், வள்ளி திங்களினையுங் குறிப்பதாகும். இவ்விரு பேராற்றலுடைய பொருள்களின் வல்லமை யினை நாத்திகனும் ஒப்பித் தலை வணங்குவான். அன்று இயற்கை எழிலினை இறைவனுகக் கண்ட தமிழர் இவற்றைப் போற்றியதில் வியப்பென்ன? இவை யிரண்டும் மக்கள் உள்ளத்தை வணங்கச் செய்ததின் இயல்பு தான் என்ன? அது தான் வண்மை; வண்மை, என்றும், தன்னை முழுதும் உலகம் வாழ அளித்துவிடுங் 'கொடையே' அதுவாம். ஞாயிற்றின் ஒளியின்றி உலக உயிர்கள் வாழுமா? திங்கள் கடல் நீரை இழுத்துப் பாய்ச்சி வெம்மையைத் தணிக்கா விட்டால், பூமியின் அடியிலிருந்து எழுந்து கொண்டேயிருக்கும் வெம்மை உலகினை என்ன செய்யும்! இப்பேருதவிகளை விஞ்ஞானி களும் இன்று கூறி வாழ்த்துகின்றனர்.

தண்மை கலந்த அருளும், வெம்மை கலந்த வீரமும் உலகினில் உரிமையை நாட்டி, உயர்வினை (கடந்த நிலை) யளிக்கின்றன. தண்ணிய

அருள் வடிவாய பெண்ணும், வெய்ய வீரவுருவினனாய ஆணும் சேர்ந்தே உலகாகத் திகழ்கின்றது. இக் காட்சியினை நிலையாக்கி என்றும் தம் வழிவரும் மக்களை இன்புறுத்தத் தண்மை; அருள்; பெண்மைப் பிழம்பாய திங்களினையும், வெம்மை; வீரம்; ஆண்மைப் பிழம்பாய ஞாயிற்றினையும், அன்று நந்தமிழ்ப் பெரியோர் வாழ்த்தினர்.

தண்ணிய காதலினை விளக்கப் பெண்கள் பிறைத் திங்களை வணங்கினர். உவா (பௌர்ணமி) நாளைக் கொண்டாடினர். ஞாயிற்றினைப் பொங்கல் நாளில் கொண்டாடினர். இரண்டினையும் இடையறாது நினைந்து தம் வாழ்வின் குறிக்கோளினை முற்றச் செய்தனர். ஆண்களும் பெண்களும் கட்டற்ற, ஈகை வாழ்வினை நடாத்தினர். கடந்துயர்ந்த நாகரிகத்தினை உலகில் விளக்கினர்.

"யாயும் யாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்"

என்னும் போது தமிழ்க் காதலர் சாதி, சமயம், நிறம், நாடு என்னும் கட்டுகட்குட்பட்டா நிற்கின்றனர்?

"தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே" என்கையில் தமிழ் மகன் வீர வாழ்வு நாட்டின் உரிமைப் போரிலல்லவா அளிக்கப் படுகின்றது?

இங்ஙனம் நாட்டின் இன்பமும் சுதந்திரமும் நிலைக்க ஆண்களும் பெண்களும் தம்மையே அளித்து உள்ளத்தை அச்சமென்னும் கட்டு அற்ற நிலையில் ஆக்கிக் கொண்டனர். ஆண்களும் பெண்களும் பிணைந்ததல்லவா உலகம்! திங்கள் ஞாயிற்றொளியிலிருந்தும் பிரிந்ததா? ஆதலாற்றான் அவ்விரு இயற்கைப் பேராற்றல்களையும் கொடி நிலையாக, வள்ளியாக வைத்து வாழ்த்தினர்?

"சாதலின் இன்னாதது இல்லை இனிது அதூஉம்
ஈதல் இயையாக் கடை" என்பது வள்ளுவர் மறை.

சாவு மிகக் கொடியதும் அஞ்சத்தக்கதுந் தான். ஆனால் உன்னை முழுதும் நாட்டிற் களித்துவிடும் பண்பும் துணிவுங்கொண்ட வாழ்வு வாழ முடியாவிடில் அச்சாவும் துன்பந்தருவதே யென்கிறார். இந்த உள்ளம் அன்று செழித்தது. நாடு வாழத் தன்னைச் சாதலிலும் போரிலும் அளித்தனர் தமிழர். அந்த வண்மை கொண்ட திண்ணிய நெஞ்சு எங்கிருந்து வந்தது? வண்மை யுருவங்களாய கொடி நிலை, வள்ளி வழிபாட்டினால் என்று கூறுவேன்.

இங்ஙனம் கொடை. அதன் வழி உரிமை, அது விளங்கிய உயர்வு (யாரினுங் கடந்த நாகரிகம்) இவற்றினைப்பெறும் நல்வாழ்வினைக் கூட்டும் குறிக்கோளினைப் பெற்றதன்றோ 'தொல்காப்பியர் கடவுள்' கொள்கை. அந் நிலை இன்று வளர்ந்தால் இன்றைய சமயத்திலுள்ள மாசு நீங்கும்; ஊழல்கள் பறக்கும்; இழிவுகள் அழியும். நாடும் வாழும். இளைஞரும் மக்களும் விழித்தெழுவார்களா?

காணாப்பொருள்

சு. வே. தில்லைவனம்,
சுந்தரப்பெருமாள்கோயில்.

நாம் ஒரு பொருளைப் பார்க்க விழையின் அப் பொருள் ஒளி வீச அதனால் நம் புறக்கண் பொருளை யுணர்ந்து மூளைக்கு அறிவிக்க யாம் பார்க்க வேண்டும். அவ்விதமின்றி இருள் சூழ்ந்துள்ள ஒரு பொருளைப் பார்க்க விரும்பின் அம் முயற்சி வீணே யாகும். ஆதலினால் நம்மால் பார்க்கப்படும் பொருளானது சுய ஒளி உள்ள தாகவோ அல்லது ஒளியால் சூழப்பட்டதாகவோ இருக்க வேண்டு மென்பது வெள்ளிடை மலை. ஆனால் எண்ணுதற்கரிய ஒளியையுடைய சூரியனையோ, மின்சார விளக்கையோ அல்லது இரத்தினக்கல்லையோ கண்டு அதன் ஒளியை உன்னுதற்கு ஒரு குருடனுக்கு இயலுமா? இயலாது என்பது திண்ணம். இதனால் புலப்படுவது யாது? நம்மால் பார்க்கப்படும் பொருள் ஒளியுள்ளதாகவும், பார்க்கும் கண்ணானது ஒளியை வாங்கி நம் மூளைக்கு அனுப்பக்கூடிய ஆற்றலை யுடைய தாகவும் இருக்க வேண்டும் என்பதன்றோ?

பல உலகங்களையும் படைத்து அதன்கண்ணே வாழ்வதற்கு எண்ணிறந்த உயிர்களையும் உண்டாக்கி, அவைகள் நல்வழி அடையும் பொருட்டு, காற்று, தண்ணீர், உணவு, கனல், கதிர், கடல் முதலியவைகளை உண்டாக்கி வாழ வைக்கும் பொருள் ஒன்று இருந் தாதல் வேண்டும். அப் பொருள் யாது? அப் பொருள் தான் கடவுள். அப் பொருளை யாவராலும், எவ்விடத்தும் காண இயலாது. இதனால் கடவுள் ஒளியற்றவரெனக் கருதலாமா? கூடாது. எல்லாவற்றிற்கும் ஒரே தலைவனாக விளங்குபவன் தன் ஒளி உள்ளவனே. பிற பொருளையும் விளக்கமுறச் செய்பவனும் அவனே! இதுகாறும் கூறியவாற்றால் கடவுள் சுய ஒளி உள்ளவரென்பதும் பார்க்கும் பொருள்களாகிய நாம் பார்வை யற்றவர்களென்பதும் தெற்றெனத் தோன்றுகின்றன.

நமது வாழ்க்கையை நடத்துதற்குப் பொருள் வேண்டும். அதற்கு என் செய்வது? ஒரு நல்ல முதலாளியிடம் சென்று, நமது நல்ல திறத்தைக் கொண்டு திறம்பட வேலை செய்து, நமது முதலாளி நல்லூதியம் பெறுமாறு செய்து, அவர் அன்புடன் அளிக்கும் பொருளைப் பெற்று, நமக்கு வேண்டிய பொருளை அடைந்து வாழ்க்கையை நடத்த வேண்டும். அவ்வாறே நம்மை இப் புவியில் படைத்தருளி, பல துறைகளிலும் நல்லுதவி செய்யக் காத்துக் கொண்டிருக்கும் பரம் பொருளுக்கு நாம் செய்ய வேண்டியது என்ன? எப்பொழுதும் அவன் சிந்தனையாகவே இருந்துகொண்டும், அவனைப் பற்றிப் பாடிக்கொண்டும் இருத்தலன்றோ?

இறையில்லா இடமுண்டா ? இல்லை. பிறகு ஏன் நம்மால் காண இயலவில்லை ? நாம் பார்க்கும் பொருள்கள் யாவும் பொருள்களாகவே தோன்றும். ஈசன் தெரியவரான். நாம் இப் புவியின் கண்ணே உண்டான பொருள்கள் யாவற்றின் மேலும் இச்சை வைத்துக் கொண்டுள்ளோம். மேலும் அவற்றை எப்படி அடையலாம், எப்படி உபயோகிக்கலாம் என்ற எண்ணமே நமது மனதில் தோன்றுகின்றன. தையலார் மையலில் தயங்குகின்றோம். நமது ஈசனைப் பற்றி நினைக்க நேரமில்லை. இவ்வித மிருக்கையில் ஈசன் நமது புறக் கண்களில் புலப்படுவது சாத்தியமா ? எப்பொருளும் நம் கண்களுக்கு உலக இச்சையைக் கொடுக்கக்கூடிய பொருள்களாகவே தோன்றும் என்பதில் சந்தேகமில்லை. இதனால் கடவுள் இல்லையெனக் கூறலாமா ? நம்மால் கடவுளைக் காண முடியவில்லை என்று தான் கூறவேண்டும்

மேற்கண்ட தீச் செயல்களை விலக்கினால் கடவுளைக் காண இயலுமா ? இயலும். உலக ஆசையை வெறுத்து, கடவுளைக் காண வேண்டுமென உறுதியுடனிருந்து, அக் கடவுளையே தியானித்துக் கொண்டிருந்து இறுதியாகக் கண்ட மகான்கள் இவ்வுலகின்கண் எத்தனை பேர்களோ இருந்திருக்கின்றனர். அவர்களே காணுப் பொருளைக் காணும் கண்களையுடைய ஞானிகள். இராமகிருட்டின பரம அம்சர் உலக ஆசைகளை வெறுத்தார்; கல்லையும் பொன்னையும் சமமாக அள்ளிக் கடல் மீதெறிந்தார். கடவுளைக் காண உறுதியுடனிருந்து, கடவுளைக் கண்டார். தனது சீடரும் வங்கச் சிங்கமுமாகிய விவேகாநந்தருக்கும் காட்டி யருளினார். அவ்விதமின்றி உலக வாழ்வில் ஆழ்ந்திருக்கும் மக்கள், அப் பொருளைக் காணுவது எளிதல்ல.

ஆனால், கடவுளைக் காணும் நிலையைத் திடீரென அடைய முடியுமா ? ஒருகாலும் முடியாது. அக் காரணம் பற்றியே அக் கடவுளை நினைப்பூட்டும் வண்ணம் பல இடங்களிலும் எல்லையற்ற பொருளைக்கொண்டு ஆலயங்கள் கட்டி வைத்திருக்கின்றனர். ஆலயங்களைக் காணுந்தோறும், அவைகளைப் பற்றி நினைக்கும் போதும், எவ்விதம் ஒரு பெரியாருடைய உருவப் படத்தைக் காணும் போது அவருடைய நினைவும், அவருடைய செயல்களும் நமது நினைவிற்கு வருகின்றனவோ அவ்வாறே நம்மைப் படைத்த ஈசனைப் பற்றிய நினைவும் அவனது அருளும் ஞாபகத்திற்கு வருகின்றன இவ்விதமே பல தடவைகளிலும் அவரது ஞாபகம் ஏற்பட்டால், காட்டிற்குச் சென்று கடுந்தவம் புரிய வேண்டுவதில்லை, கடவுளைக் காணப் பல வழிகளுள்ளன. அவைகளுள் சிறந்தது, காட்டிற்குச் சென்று தவம் புரிவது. ஆனால், அது யாவராலும் செய்யக்கூடிய காரியமில்லை. திருவள்ளுவர், இராமலிங்க சுவாமிகள், இராமகிருட்டினபரம அம்சர், விவேகாநந்தர் முதலியவர்கள் காட்டிற்குச் சென்று தவம் செய்தா அந்தமில்லா ஆனந்த மெய்தினர் ? இல்லையன்றோ ? திருவள்ளுவர் இல்லற வாழ்க்கையை நடத்திக்கொண்டே பேரின்ப வீட்டை அடைய முயற்சிக்கலாம் எனத் தெளிவுறக் காட்டியுள்ளார்.

பிறகு ஆலயங்கள் எதற்கு? நாம் இவ்வுலகின் கண்ணே பல அலுவல்களை மேற்கொண்டுள்ளோம். அதனால் ஈசனை அடைய வேண்டுமென்ற ஒரே நோக்கமற்ற மனிதர்களுக்கு ஈசன் ஞாபகம் வருவதில்லை. அதனை அடிக்கடி நினைப்பூட்டுவதற்காகவே ஆலயங்களை அதிகமாக அமைத்திருக்கின்றனர். இவ்விதம் ஆலயங்கள் அமைக்கப் படாவிடின் யாவருக்கும் ஈசன் ஞாபகம் வருமா? என்பதைச் சற்று சிந்தனை செய்ய வேண்டும்.

ஆனல் எக் காரியம் செய்யினும் நம்பிக்கை அவசியமாகும். "நீ தினமும் ஆலயங்களுக்குச் சென்று கடவுளை வணங்கி, அபிடேக ஆராதனை செய்து வந்தால் உனது நோய் தீரும்." என ஒரு உண்மை பக்தன் கூறினல் அவ் வார்த்தைகளை அவசியம் நம்புதல் வேண்டும். அந் நம்பிக்கையே நமது வியாதிக்கு ஒரு மருந்தாகும். ஒரு சிலர் பெரியோர்களின் வாக்கின்படி செய்துகொண்டு வருவார்கள். ஆனல், சொல்லிய அளவில் கால் பகுதி செய்த உடன், அரைப் பாகந் தானும் நலமாகவில்லையே எனக் கருதி நிறுத்தி விடுகிறார்கள். இதுவும் முழு நம்பிக்கை யற்றதே. பத்து நாட்கள் செய்யக் கூறின், அன்புடனே பதினைந்து நாட்கள் செய்கிறேன் எனக் கூறி, செய்தல் வேண்டும். பிறர்க்கெனச் செய்யாது, உண்மையான பத்தியுடன் செய்தல் வேண்டும். அவ்விதம் செய்வோமாயின் நன்மை பெறுவது திண்ணம்.

இதுகாறும் கூறியவாற்றால், பல உலகங்களைப் படைத்த, ஒரே பரம் பொருளாகிய, கடவுளைப் பத்தி, உறுதி, நம்பிக்கை எப்பொழுதும் அவனைப்பற்றி நினைத்தல் முதலியவைகள் மூலமாகக் காணலாம் என்பது புலப்படுகிறதல்லவா?

"நின்று மிருந்துங் கிடந்தும் நடந்தும்
நினை என்றும் சிவன்றாளினை."

மாடலன் மறைமொழி

K. கோதண்டபாணி அவர்கள், மாணவர்,
வித்துவான், முடிநிலைவகுப்பு, கரந்தைப் புலவர் கல்லூரி.

மாடலன் என்னும் பெயரமைந்த மறையோன் நந் தமிழர்களால் நயமுள்ளதென நவிலும் ஐம்பெருங் காப்பியத்தில் ஒன்றாகிய சிலப்பதிகார மென்னும் செவ்விய நூலின் கண்ணே இடையறாது பயின்று வந்துள்ளான் என்பது யாம் அறிந்ததே. ஆனல் அம் மறையோன் மாற்றத்திலும், செயலிலும் இலக்கிய ஆசிரியர் இளங் கோவடிகள் கூறும் வாயிலாக கரவுறு மொழிகள் கலந்துள்ளதா அன்றி, நன்னெறியுய்க்கும் நெறியுளதா? என்பதை ஆய்வான் விழைந்தே இக்கட்டுரை எழுந்தது. ஆயின் மாடலன் மாற்றத்திலும்,

செயலிலும் நன்னெறியுய்க்கும் நெறி சிறிதிருப்பினும், கரவுறு மொழிகள் கலந்த செய்கையே மலிந்து காணுதல் ஊன்றி நோக்கின் உணரலாம்.

பண்டைக் காலத்தில் அரசர் பெருமக்களோ அன்றி, தலைவனுதற் கேற்ற தகுதியுடையோரோ தனக்கு உற்றுழியுதவும் நட்பாளராக அந்தணர்களைக் கொண்டுள்ளார்கள் என்பது இலக்கியத்தில் கண்டதோர் உண்மை. கோவைகளை நோக்கின் பார்ப்பனப் பாங்கன் ஒத்தாரு மிக்காரு மில்லாத் தலைவனுக்கு உற்ற நண்பனுகக் காணப் படுவான். தலைவன் அப்பாங்கனை ஏனையோரினும் ஏற்றமுடையனுகவே நன்கு மதிப்பான் என்பதும் உணரலாம். அதற்கு எடுத்துக் காட்டாக;

"அமிழ்தத் தன்ன அந்தீங் கிளவி
அன்ன வினியோள் குணனு மின்ன
இன்னு வரும்படர் செய்யு மாயின்
உடனுறை வரிதே காமம்
குறுக லோம்புமின் னறிவுடை யீரே!"

என்ற குறுந்தொகைச் செய்யுளான் தன்னை அன்பினல் கழறியுரைத்த பாங்கனை அறிவுடையீரே என முன்னிலைப் படுத்து முகத்தான் எவ்வளவு ஏற்ற மளித்துள்ளான் என்பதை எண்ணிப் பாருங்கள்.

அன்றியும் 'கேளிர் வாழியோ கேளிர்' என்ற குறுந்தொகைச் செய்யுளானும் பார்ப்பனப் பாங்கனைப் பன்மைபடக் கூறுதலும் உயர்வுற மொழிதலும் உணரலாம். இதையே இறையனுர் களவியல் உரையிலும் 'பாங்கனுல் குறிதலைப் பெய்தலும் எனச் சூத்திரம் செய்யாது' பாங்கனேரின் எனப் பன்மைபடக் கூறியது எற்றிற்கு? அவன் ஒருவனுலோ எனின் :— 'பாங்கன் பார்ப்பானுகலின் பன்மை வாசகத்தாற் சொன்னுர். அல்லதூஉம் இருமுது குரவராலும் இவனை எம்போல் கொண்டு ஒழுகு என்று தலைமகற்குக் காட்டிக் கொடுக்கப்பட்டான் பாங்கன் என்பதூஉம் நீயும் எம் போலத் தியன கண்டு பண்பானவிடத்து அடக்குவாயாக என்று பாங்கற்கு காட்டிக் கொடுக்கப்பட்டான் தலைமகன் என்பதூஉம் போதரல் வேண்டி, பன்மை வாசகம் படச் சொன்னுர்' எனக் கூறியவாற்ருனும் உணரலாம்.

நிற்க, இனிப் புறவொழுக்கத்தை நோக்கின் அரசர் பெருமக்கள் அந்தணர் ஆசி மொழிகளையும் அவர்களின் வாய்மொழிகளையுமே கேட்டொழுகினுர்கள் என்பதூஉம் அறியற்பாலதாம். அன்றியும் அந்தணர்கள் புலவர் பெருமக்களாலும் பொற்புடன் பாடப் பட்டார்கள் என்பதூஉம் 'ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்' எனவும் 'பார்ப்பார் தப்பிய கொடுமையோர்க்கும்' எனவும் 'ஆபயன் குன்றும் அறு தொழிலோர் நூன் மறப்பர்' எனவும் இன்னும் பிறவும் இலக்கியந்தோறும் பயின்று வருதலானும் உணரலாம்,

இதுபோலவே சிலப்பதிகாரத்தின் றுணைகொண்டு மாடலன் என்னும் மறையவனும் சேரன் செங்குட்டுவனுல் நன்கு மதிக்கப் பெற்று ஐயைந்திரட்டி ஆடகம் பெற்றனன் என்பதூஉம் அறியலாம். சேரன் செங்குட்டுவன் கனக விசயர் அடங்கிய ஆரிய மன்னர்களோடு அமருன்றி, செருவில் வென்றி யெய்தி அன்னுர் தலையிலே வட பேரிமைக்கல்லை வில்லவன் கோதையால் சுமத்தி கங்கையாறு போந்து நீராட்டி அமர்ந்திருக்குங் காலை மாடலன் போந்தான். போந்து 'மாதவி மடந்தை கானற் பாணி கனக விசயர் தம் முடித்தலை நெரித்தது' என்னும் அரசன் ஆர்வமுற்று வினவும் மொழி எழுப்பினுன். அப்போது யாங்ஙனம் மாதவி மடந்தை கானற் பாணி ஆரிய அரசர்களின் முடித்தலை நெரித்தது என்பதற்குக் காரணமாக வரலாறு அவனுல் கூறப்படுகிறது. அதில் மதுரையில் நெடுஞ் செழியன் இறந்தமை பற்றி மட்டும் அவனுல் உணர்த்தப்படுகிறது. நெடுஞ்செழியனேடு உடனுயிர் நீத்த பெருங்கோப்பெண்டு உயிர் நீத்தமை உணர்த்தப்படவில்லை. அன்றியும் யான் கங்கை நீராடப் போந்தது நான் சென்ற இடம், என் வாய்க் கேட்டோர் யாவரும் இழுக்க நேரிட்டார்கள் ஆகலின் அக் கருமக் கழிவின் காரணமாகக் கங்கையாடப் போந்தேன் எனவும் இறுதியில் அவனுல் உணர்த்தப் படுகிறது. அவ்வாறு இழந்தவர்கள், துறந்தவர்கள் நிலை கூறுங் காலும் பெருங்கோப்பெண்டு இறந்தமை சேரனுக்கு அன்னுனுல் உணர்த்தப்படவில்லை. ஆண்டு தான் மாடலன் மறைமொழி வெளிப் படுகிறது. ஆனல் முன்னரே சாத்தனுல் அறிந்த செங்குட்டுவன் தான் எல்லோரும் இவ்வுலகு நீத்த செய்தியை இயம்பினீர். பாண்டியன் மனைவி உயிர் நீத்தமை கூருது வாளா யிருந்தமை எற்றுக்கு என்ருவது வினவினுனு? இன்று.

இதையே இறையனுர் அகப்பொருளுரையில் ஒத்த அன்பிற்கு இலக்கணங் கூறுங்கால் 'அன்புடையரான குணம் யாவையோ வெனின் சாவிற் சாதல், நோவினேதல் ஒண்பொருள் கொடுத்தல், நன்கினிது மொழிதல் புணர்வுநனி வேட்டல் பிரிவுநனி இரங்கல் என்றும், இவை திரிபின்றி நிகழ்ந்த வழி அன்பு உண்டென்றும், அஃது எங்ஙனமோ என்ற வழி அவன் இறந்துபட்டவாறே தானும் இறந்துபட்டவழி அன்பினுனே ஆயிற்றெனக் கொள்க. என இயம்பியவை யானும் ஒத்த அன்பு என்பது இன்னதென அறிவுறுத்து கிருர். இதை ஒப்பு நோக்க ஒத்த அன்புற்ற ஒரு தமிழ் நாட்டு மங்கையின் கற்பை வரலாறு கூறுங்கால் எடுத்தியம்பாது வறிதே விடுதல் தமிழ் மக்களின் புகழுறு செயலைப் பொன்றுவிக்கச் செய்யும் கருவியன்ருே. இந் நிகழ்ச்சியை இளங்கோவடிகளும் கூறும்போது கோவலன் கள்வனல்லன் என உணர்ந்த பாண்டியன் அறம் பிழைத் தேனென அரசு கட்டிலினின்றும் உயிர் நீக்க அவன் மனைவி உயிர் நீத்தமையைச் சாத்தனுர் கூற்ருக 'தன்னுயிர் கொண்டவன் உயிர் தேடினள் போல் பெருங்கோப்பெண்டும் ஒருங்குடன் மாய்ந்தனள்' எனக் கூறியுள்ளமையானும் ஏற்றம் புலனும். தமிழ்நாட்டு மங்கை களின் சிறந்த அணிகலம் கற்பன்ருே? கற்பை எடுத்தியம்பப் போந்த

நூலன்றோ சிலப்பதிகாரமும் ? இதை மறைத்த மறையவனின் கரவு மொழியைக் காண்க.

இனிமேலும் நோக்கின் ஆரிய அரசரோடு எதிரூன்றிப் போர் புரியுங்கால் சேரனின் சேனாதிபதியாக விளங்கிய வில்லவன் கோதையின் வீரச் செயல்கள் விளக்கமுறக் கூறப்பட்டுள்ளன நூலில். ஆரிய அரசர்களின் தலையில் கல் சுமத்தியது வில்லவன் கோதையல்லவா ? ஆரிய அரசரை அவமானமுறச் செய்த வில்லவன் கோதை அதே ஆரிய அரசர்களுக்கு ஏவல் செய்யும் புல்லிய ஏவலாளனாக நியமிக்கப்படுகிறான்.

சேரன் செங்குட்டுவனுக்கு மாடலன் அறவுரை பல கூறி இறுதியில் வேள்வி செய்கவென ஏவுகின்றனன். இதை மறையோன், வேள்வி செய்க என்ற வித்தை தன் நாவினால் செங்குட்டுவன் செவி நிலமாக வுழுது விதைத்தான் விதைக்க வித்திய பதம் பெரும் பயன் விளைக்கத் தொடங்கி அதைத் துய்த்தலவாவில் இறையோன் வேள்வி விருப்புடன் விழைந்தனன். அவ் வேள்வி செய்ததன் பயனாக அரசன் சிறையோர் கோட்டத்தைச் சீமின் எனவும் கறை கெழுநாடு கறை வீடு செய்மின் எனவும் ஏவி ஆரிய அரசர்களைச் சிறை நீக்கி வேளாவிக்கோ மாளிகையில் அவர்களை இருக்கச் செய்து வில்லவன் கோதையாகிய வீரனை அவர்களுக்கு ஏற்பனசெய்யும் ஏவலாளனாகப் பணிக்கிறான். இச்செயல் மாடலன் மறை மொழியால் விளைந்த பயனன்றோ ? மாடலன் தன் இனத்தான் விடுதலை விழைந்தமையின் இனவுணர்ச்சி உள்ளவனாகவும் காணப் பட்டுள்ளான்.

செங்குட்டுவனுக்கு மாடலன் கூறும் அறவுரையிலும் ஏனைத் தமிழ்ப்புலவர் தமிழ் நாட்டு அரசர்கட்குக் கூறும் அறவுரைகளிலும் வேறுபாடுகள் பல சீருடன் காணப்படுகின்றன. தமிழ்ப் புலவர்கள் கூறுங்கால் “ அருளும் அன்பும் நீக்கி நீங்கா நிரையம் கொள்பவரோடு ஒன்றாது குழவி கொள்பவரின் ஓம்பு மதி ” எனவும், ‘ நல்லதனலனும் தீயதன் தீமையும் இல்லை யென்போர்க்கு இனனாகிலியர் ’ எனவும், ‘ பிறர் பழி கூறுவோர் மொழி தேறலையே ’ எனவும், கூறுமாற்றான் அதன் உயர்வு சிறந்து காணப்படுகிறது. ஆனால் மாடலன் கூற்று பொருட் பரிசிலேனல்லன் எனக் கூறும் மாற்றங்கள் தோறும் கூறுகின்றமையால் அது வேறுபாடுடையது என்பது காணப் படுகிறது.

இவ்வாறு உரைத்தமையான் மாடலனின் மொழிகளில் மறை மொழிகள் இடைவிராய் இருக்கிற தென்பது ஒருவாறு ஓர்ந் துணரலாம்.

எம்மனோர் இல் செம்மலும் உடைத்தே.

திரு. வித்துவான். K. கோவிந்தன், திருவத்திபுரம்.

பேரொலி செய்யும் பெருங்கடற் கரையில், பால் ஒளி செய்யும் பருமணற் பரப்பு; அம் மணற் பரப்பு முற்றிலும் புன்னை மரங்கள் நன் மலர் மலர்ந்து நிழல் செய்து நிற்கின்றன; அப் புன்னை மரங்களின் நிழல் தோறும், பரதவர் மகளிர் பலர் கூடித், தம் தந்தை, தன்னையர் கொணர்ந்த மீன்களுக்கு உப்பிட்டு உலர்த்தி, அவற்றினை உண்ண வரும் கடற் காக்கைகளை ஓட்டுவதற்கிடையே, மணல் வீடு கட்டியும், கடல் நண்டாட்டியும், கழங்காடியும் விளையாடல் புரிந்து வாழுகின்றனர். அம் மகளிர் பலருள், கையில் வளையும், காலிற் சிலம்பும் அணிந்து, எழில் மிக்கு, அம் மகளிர் தமக்கு இறைவி யென உள்ளாள் ஒருத்தி மட்டில், முகப் பொலிவு குன்றி, புள்ளோப் புதலாகிய தம் தொழிலையும் செய்யாது, மகளிருடன் கூடி ஆடலும் புரியாது, தன் உயிர்த் தோழியுடன், அம் மகளிரை விட்டுப் பிரிந்து சென்று தனியே ஒரு மரத்தடியில் வந்து தங்குகின்றாள். தங்கிய அத்தலை மகளின் ஆற்றாமையைக் கண்ட அவள் தோழி, அவள் ஆற்றாமைக்குரிய காரணத்தை அறிய விரும்புகின்றாள். தலைவி, தனக்கும், அரசன் மகன் ஒருவனுக்கும் உண்டாய அன்பின் பிணைப் பையும், 'பிரியேன்' என்று கூறிய அவன், பிரிந்து சென்றதோடு நில்லாது, நாள் பல வாகியும் வாராதிருப்பதையும் கூறி அறத்தொடு நிற்கின்றாள். அது கேட்ட தோழி, பிரிந்து சென்ற தலைவர், விரைவில் வருவார் எனவும், வந்து, தமர் அறிய மணம் புரிந்து தலையளி செய்வர் எனவும், கூறி அவள் ஆற்றாமையைப் போக்கிக் கொண்டு இருக்கின்றாள்.

நாட்டில் உள்ள கடவுளருக்குப் பல் வேறு காலங்களில் விழா எடுப்பது குறித்துக் கட்டப்பெற்ற கொடிகள், அங்காடிகளின் இரு மருங்கும் விளங்குகின்றன; நெல் முதலாய பல் வேறு கூலங்களுள் இன்ன பொருள் இன்ன இடத்தே உளது; அதன் விலை இவ்வளவு என விற்பார் கூறாமல், வாங்குவார் தாமே, அறிந்துகொள்வதற் கேற்ற குறியீடுகளைக் கொண்ட கொடிகள் ஒரு பால் நின்று அசை கின்றன; கல்வி, கேள்விகளில் சிறந்த பெரியோர்கள் பலரும் கூடி, ஆராய்ச்சிகளும், சொற்போர்களும் நடத்தும் இடங்களை அறிவிப் பதற்குக் கட்டப்பெற்ற கொடிகள் மற்றொரு பால் தோன்றி விளங்கு கின்றன; தங்கள் அரசன் பகை வேந்தரை வென்று, அவர் தம் அரணைக் கைப்பற்றிய, வெற்றிச் சிறப்பினைக் கொண்டாடுதற்குக் கட்டப்பெற்ற கொடிகள் நகரெங்கும் நின்று காட்சி அளிக்கின்றன; கடல் துறைகளில் நிற்கும் நாவாய்களின் பாய் மரங்களின் மீது கட்டப்பெற்று விளங்கும் பல் வேறு நாட்டுக் கொடிகள் கடற்கரை எங்கும் தோன்றி, கடற் காற்றால் அசைகின்றன. இத்தகைய பெருஞ்

சிறப்பு வாய்ந்த மாநகர் அரசன் ஒருவனுடைய காதல் மகன், மாலைக் காலத்தே மணித்தேர் ஏறி, கடற்கரையை அடைகின்றான்; அடைந்தவன், பரதவர் மகளிர் கூடி விளையாடும் இடத்திற்கு மிகச் சேய்மைக கண்ணே, தேர் விட்டு இழிந்து, அம் மகளிரை நடை கொண்டு நாடிச் செல்லுகின்றான். அவன் வருவது கண்ட மகளிர், நாணத்தால் ஒருவர் மெய்யில் ஒருவராக ஒளிந்து கொள்ளுகின்றனர். அம் மகளிர் குழாத்தைக் கூர்ந்து நோக்கிய அரசிளங் குமரன், ஆண்டுத் தலைவி இல்லாமையை அறிந்து, மேலும் நடக்கத் தொடங்கி, இறுதியில், தலைவியும், அவள் காதல் தோழியும் கூடியிருக்கும் இடத்தை அடைகின்றான். இதுகாறும் தலைவியைத் தனித்துக் கூடியது போன்று இனி இயலாது என்பதையும், மகளிர் பலரும் போன்று ஆண்டே கூடி ஆடல் புரியாது, தலைவியைச் சேர்ந்து வாழும் இயல்பால், தலைவியோடு இருப்பவளே அவள் உயிர்த்தோழி ஆவாள் என்பதையும், இனி, அவள் துணையிருந்தால் அன்றித் தலைவியைப் பெறுதல் இயலாது என்பதையும் அறிந்தவனாய்த் தோழிபால் சென்று, தனக்கும், தலைவிக்கும் உளவாய, நட்புண்மை கூறி, அவளைப் பெறுதற்குத் துணைபுரியுமாறு வேண்டுகின்றான். தோழி, அங்கு மகளிர் பலர் கூடியிருப்பதையும், கூட்டம் இடை யிடையே வாய்க்கப்பெறின், அவன் வரையாது களவிலேயே ஒழுக விரும்புவான் என்பதையும், பிரிந்து நாள் பல சென்று வருதலால், தலைவியின் வருத்தம் மிகுவதையும், மனத்திடைகொண்டு, தலைவனை நோக்கி,

"ஏ அரசன் மகனே! நின்னால் விரும்பப்பட்டவளாய எம் தலைவி, கடற்கரைச் சோலையிடையே அமைந்த அழகிய சிறு குடில்களில் வாழ்பவரும், நீல நிறம் பொருந்திய பெரிய கடல் கலங்குமாறு கலத்தின் மீது சென்று வலைவீசி, மீன் பிடிப்பவரும் ஆய பரதவருடைய மகளாவாள்; நீயோ, நீண்ட கொடிகள் பல அசையும் அங்காடிகள் நிறைந்த பழமையான ஊரினையும், விரைந்து செல்லும் தேரினையும் உடைய அரசனுடைய காதல் மகன் ஆவை; ஆதலின், நின் செயல், எம் குலத்திற்கே பொருந்துமாறு இல்லை; மேலும், புலால் நாறும் சுறுமீன்களின் துண்டுகளை உலர்த்திவிட்டு, அவற்றை உண்ண வேண்டி, கூட்டம் கூட்டமாக வரும் கடற் காக்கை முதலாய புள்ளினத்தை ஓட்டும் இழிந்த இயல்பினேமாய எமக்கு, நின்னை ஒத்த அரசரால் செய்யப்படும் நலந்தான் யாது பயன் அளிக்கவல்லது? புலால் நாறும் மீன் உணக்கும் தொழில் உடைய யாங்களும் புலால் நாறுகின்றேம் ஆதலின், எம் அருகே வராது, சற்று விலகி நிற்பீராக; கடலையே விளை நிலமாகக்கொண்ட எம் சிறிய நல்ல வாழ்க்கை, உம்முடைய உயர்ந்த அரச வாழ்க்கையோடு ஒத்த உயர்வுடையது அன்று; எனினும், எம்போன்ற பரதவர் குடியுள்ளும், நும் போன்ற செல்வ மக்கள் பலர் உளர்." என்று கூறுகின்றாள்.

"இவளே, கானல் நண்ணிய காமர் சிறுகுடி
நீனிறப் பெருங்கடல் கலங்க உள்புக்கு

மீனெறி பரதவர் மகளே;
நீயே, நெடுங்கொடி நுடங்கும் நியமமூதூர்க்
கடுந்தேர்ச் செல்வன் காதல் மகனே;
நிணச்சுரு வறுத்த வுணக்கல் வேண்டி
இனப்புள் ஒப்பும் எமக்கு நலன் எவனோ?
புலவு நாறுதும்; செலநின் றீமோ;
பெருநீர் விளையுள் எம் சிறுநல் வாழ்க்கை,
நும்மொடு புரைவதோ அன்றே;
எம்மனோர் இல் செம்மலும் உடைத்தே.''

நின் களவொழுக்கத்தை எமர் அறியின் நினக்கு ஏதம் பல இழைப்பர் என அச்சுறுத்திக் களவொழுக்கத்தைக் கடிய விரும்புவாள், 'எமர், கடலையும் கலக்கும் பெருவன்மையர்' எனவும், நீ இவ்வாறு எங்கள் தலைவியின் நலத்தைக் களவொழுக்கில் நுகர விடாமல் நின்னைத் தடை செய்து அப்புறப் படுத்துவேம் என்பாள், 'மீன் உணக்கலைக் களவிலே உண்ணவரும் புள்ளோப்பும் தொழில் உடையேம்' எனவும், இவ்வாறு களவொழுக்கில் ஒழுகுவதற்குத் தடையுண்டாவது கண்டு நீ வருந்தினும் நாங்கள் நின்பால் இரக்கம் ஒரு சிறிதும் காட்டேம் என்பாள், 'நாங்கள், இரக்கம் இன்றிச் சுருமீன்களைத் துண்டித்து உணக்கும் இயல்புடையேம்' எனவும், இவ்வாறு கூறுவது கண்டு, தலைவன் வருந்திச் செல்வன் என்று அஞ்சி, நீ இவ்வாறு அரசன் மகன் போன்று வருவதை விட்டுப் புலால்நாறும் எம்மவர் போலவரின் நலமாம் எனவும், அவ்வாறுவரின், எம்மவரும், தம் குலமாதல் அறிந்து நினக்கு எம் தலைவியை மணம் செய்து தருவர் எனவும் கூறுவாள், 'புலவு நாறுதும்.' 'எம்மனோர் இல் செம்மலும் உடைத்தே' எனவும், ஈண்டு மகளிர் பலர் கூடியுள்ளார் ஆதலின், இவ்விடம் கூட்டத்திற்கு ஏற்ற இடம் அன்று என்பாள். 'செல நின்றீமோ' எனவும் கூறிய தோழியின் அறிவாற்றல் அறிந்து மகிழ்தற்குரியதாம்.

புதுக்கோட்டை,
பண்டித, R. உலகநாத பிள்ளை, அவர்களின் மறைவு.

நமது சங்க அன்பர் புதுக்கோட்டை, பண்டிதர். R. உலகநாத பிள்ளை அவர்கள், 1—1—46-ஆம் நாள் புதுக்கோட்டையில் தமதில்லத்தில் உயிர் நீத்தார்கள் என்ற செய்தி கேட்டு மிக்க வருந்துகின்றோம். பல நூல்களுக்கு ஆசிரியராயிலங்கினர்கள். புதுக்கோட்டை மன்னருக்குத் தமிழாசிரியராய் இருந்து தமிழறிவுறுத்திப் பெரும்புகழ் கொண்டார்கள். புதுக்கோட்டை மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான் பகதூர் அரசர் அவர்களால் (Poet Laureate) என்ற பட்டம் வழங்கப்பெற்றவர்கள். நல்ல பண்பும் அன்பும் வாய்ந்தவர்கள். தமிழ்ப் புலமையும் இறைமாட்டன்பும் கொண்டு தமிழ்த் தொண்டாற்றிய இவரின்னுயிர் இறைவன் திருவடி நீழலில் இன்புற்றுத் திளைக்க இறைவனை வழுத்துகின்றோம்.

பொழிலாசிரியர்.

தமிழ்நெறி விளக்க வாராய்ச்சி.

E. R. நரசிம்ம ஐயங்கார் B.A., B.L., வழக்குரைஞர், சேலம்.

தமிழ் நூல்களில் தொல்காப்பியமே மிகவுந் தொன்மைய தென்பதால் பழங்கால வழக்குகளை நன்கறிவதற்குத் தொல்காப்பிய மொன்றே சாலு மென்பர். இதனன் பழங்கால விலக்கியங்களை இயற்றிய புலவர்கள் பயின்ற விலக்கணம் தொல்காப்பியம் என்பது பெறப்படும். பழங்கால விலக்கியங்களை ஆயுங்காலை அவற்றுள் தொல்காப்பியத்திற்கு மாருன கருத்துக்களும் காணப்படுகின்றன. உரையாசிரியர்கள் மாறுபாட்டைக் களைவதற்குப் பல வகை உபாயங் களைக் காண முயல்வர். உதாரணமாகத் தொல்காப்பியர் பாலைக்குத் தனி நிலம் கூறுது போந்தார். அதற்குரிய தெய்வமும் கூறவில்லை. ஆயினும் தனி நிலமும் தெய்வமும் உண்டென்பது சங்க காலச் செய்யுட்களிற் காண்டும். (நற்றிணை 164-ல்)

> "உறைதுறந் திருந்த புறவிற் றனைது
> செங்கதிர்ச் செல்வன் தெறுதலின் மண்பக
> வுலகுமிக வருந்தி"

என்னுமடிகளில் தனி நிலமும் ஞாயிறு என்னும் தெய்வமும் கூறப் படுகின்றன காண்க. கலித்தொகையில் 'காடுகாண் கொற்றிக்குப் பேய் நொடித்தாங்கு' என்று வருவதில் பகவதியைப் பாலைக்குத் தெய்வமாகக் கொள்ளப்பட்டிருக்கிறது காண்க. தமிழ் நெறி விளக்க மென்னும் நூல் வெம்பரல் நிலம் பாலையாகு மெனவும் அதற்குத் தெய்வம் ஞாயிருகு மெனவும் கூறுகின்றது. சங்க கால வழக்கினைத் தமிழ் நெறி விளக்கநூல் நன்கறிவிக்கின்றது காண்க. தொல்காப்பியர் கூறும் வழக்கு சங்க கால வழக்கிற்கு மாறுபடுகின்றதும் காண்க. இதனன் சங்க காலத்தில் தொல்காப்பியர் கூறுங் கருத்தே நிலவி யிருந்ததென்னக் கொள்ளவமையா தென்பது பெறப்படும். இக் கருத்து புதுமையாகத் தோன்றுமாகலின் இதனை வலியுறுத்தும் வேறு பிற சான்றுகளையுங் காட்டுவாம். களவுப் புணர்ச்சி முன் கைக்கிளை நிகழ்தல் கடனென்பது தொல்காப்பியர் கூறுவதொன்ருகும். இது அகத்திணையின் தொடக்கமா மென்பது தெளிவாம். கைக்கிளையை அகப்புறம் என்னும் பாகுபாட்டில் பன்னிரு படலத்தார் அடக்கி யுள்ளார். கைக்கிளை வரும் செய்யுட்களைக் கலித்தொகையில் இறுதியில் கோக்கப்பட்டிருப்பது பன்னிரு படலத்தார் கருத்துக் கொத்தும் தொல்காப்பியத்திற்கு மாறுபட்டதாயும் இருப்பது காண்க. கைக்கிளைத் துறையில் வரும் ஐயக் கிளவிக்கும் துணிவுக் கிளவிக்கும் தேவருக்குரிய பண்புகள் உறுப்பாகக் கூறப்படுகின்றன. இப் பண்புகளைக்கொண்ட சங்க காலச் செய்யுள் காண்பதரி தாகின்றது. திருக்குறள் சங்க காலத்திற்கு பிற் காலத்திய தென்பது எமது கருத்து. கொல்லேறு கொண்டவனுக்குக் கன்னியைக்

கொடுப்பதென்பது 'அன்பினைந்திணையுள்' அடக்க வொண்ணாது. முல்லைக் கலியில் கொல்லேறு கோடல் விரிவுபட வோதப்படுகின்றது காண்க. இத்தகையன பல காட்ட வியலும். இவற்றான் சங்க காலத்தில் தொல்காப்பியராற் கூறப்படாத பல கருத்துக்களும் அவராற் கூறப்பட்ட கருத்துக்களுக்கு மாறுபட்டனவும் பல வழங்கி யிருத்தல் வேண்டுமென்பது பெறப்படும். எனவே பழங்கால வழக்குகளை அறிவதற்குத் தொல்காப்பிய மொன்றுமே சாலும் என்பது பொருந்தாது. அக்கால வழக்குகளை முற்ற உணர வேண்டுமாயின் பிற நூல்களின் துணையும் வேண்டுமென்னலாம். இத்தகைய நூல்களில் சிறந்ததொன்று தமிழ் நெறி விளக்கம் என்பது. இதுவும் தொன்மையதோர் இலக்கணமாகும். இந்நூலின் அருமை பெருமைகளைக் 'களவியற் காரிகை' என்னும் நூலாசிரியர் அறிந்து கூறியிருப்பது அறியத்தக்கது. இவ்விரு நூல்களையும் நன்காராயின் இலக்கண வரலாற்றின் உண்மை புலப்படும் என்பதைக் காட்டுவாம்.

களவியற் காரிகை என்பது நூற்பெயரும் ஆசிரியர் பெயரும் உரையாசிரியர் பெயருமின்றிச் சென்னைக் கையெழுத்துப் புத்தக சாலையில் கிடைத்ததொரு நூலாகும். இதனைக் கண்டெடுத்து நாம கரணஞ் செய்து வெளியிட்ட பெருமை சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியரான திரு. வையாபுரிப் பிள்ளையவர்களுக்குரியதாகும். இந்நூல் ஆராய்ச்சிக்குத் துணைபுரியுமென அவர் கருதினார். அவ ருக்கம் பாராட்டற்பாலது.

இந்நூல் இறையனார் களவியலைத் தழுவிச் செல்வதொன்றாகும். இறையனார் நூலைப்போல அறுபது சூத்திரங்களால் அகத்திணையைக் கூறவெழுந்த தென்னலாம். இவ்வேடு சிதைந்திருப்பதால் ஐம்பது சூத்திரங்கள் மட்டும் கிடைத்துள்ளன. இடையிடையே சிலவேடுகளும் வீழ்ந்துபோயின. இந்நூலாசிரியர் கருத்துப்படி இறையனார் நூலே மற்றைய விலக்கணங்களுக்கு முந்திய தென்பதாகும் போலும். இந் நூலின் காலம் அறிய வொண்ணாதாயினும் இது பிற்காலத்ததென்பது கொள்ளவமையும். இந்நூல் மேற்கோளாட்சி பெறாதிருப்பது அறியத் தக்கது. ஆயினும் இந்நூல் ஓர் அரியவுரை பெற்றுளது. உரை யாசிரியர் நூலாசிரியர் கருத்தை நுனித்தறிந்து உரை வகுத்துள்ளார். இவர் காட்டும் மேற்கோள் பல தொன்மையனவாகும். பாண்டிக் கோவை, பொருளியல், சிற்றட்டகம், தமிழ் நெறி விளக்கம், அரையர் கோவை முதலியன. பிற்கால நூல்கள் பல காட்டப் பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று பல்சந்தமாலை என்பது. இதனில் மகம்மதிய வரசன் ஒருவன் புகழப்படுகின்றான். இதனால் உரை யாசிரியரின் காலம் 18-ஆம் நூற்றாண்டாகக் கொள்ளலாம். இவ் வாசிரியர் மிகவும் பிற்காலத்தவராயினும் அகப்பொருள் இலக்கண வரலாற்றை நன்காய்ந்து உரை கூறியுள்ளார். இவர் ஆராய்ச்சி யறிவு மிக்குடையவர் என்னலாம்.

(தொடரும்.)